SAPTHAGIRI (TAMIL)
ILLUSTRATED MONTHLY
Volume:1, Issue: 7, Pages:56
February-2022, Price Rs.5/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

பிப்ரவரி 2022

விலை ரூ.5/-





# ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

## 2022 பிப்ரவரி 19 முதல் 28 வரை



**19-02-2022 சனிக்கிழமை**
இரவு : சேனாதிபதி உத்ஸவம்
அங்குரார்ப்பணம்

**20-02-2022 ஞாயிற்றுக்கிழமை**
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**21-02-2022 திங்கட்கிழமை**
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**22-02-2022 செவ்வாய்க்கிழமை**
பகல் : சிம்ஹ வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**23-02-2022 புதன் கிழமை**
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : சர்வபூபால வாகனம்

**24-02-2022 வியாழக்கிழமை**
பகல் : மோகினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

**25-02-2022 வெள்ளிக்கிழமை**
பகல் : ஹனுமத்வாகனம்
இரவு : யானை வாகனம்

**26-02-2022 சனிக்கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**27-02-2022 ஞாயிற்றுக்கிழமை**
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்

**28-02-2022 திங்கட்கிழமை**
பகல் : சக்ரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்

நகாங்க்ஷே விஜயம் க்ருஷ்ண
ந ச ராஜ்யம் ஸுக$_2$ாநி ச ।
கிம் நோ ராஜ்யேந கே$_3$ாவிந்த$_3$
கிம் பே$_4$ாகை$_3$ர்ஜீவிதேந வா ॥

ஸ்ரீகிருஷ்ணா! நான் வெற்றியை விரும்பவில்லை. ராஜ்யத்தையும் விரும்பவில்லை; சுகங்களையும் விரும்பவில்லை. கோவிந்தா! நமக்குஇத்தகைய ராஜ்யத்தினால் என்ன பயன்? அல்லது இத்தகைய சுகபோகங்களாலோ உயிரோடு வாழ்வதாலோகூட என்ன பயன்?

- ஸ்ரீமத் பகவத் கீதை 1-32



த்யேயஸ் ஸதா ஸவித்ருமண்டல மத்யவர்த்தீ
நாராயணஸ் ஸரஸிஜாஸந ஸந்நிவிஷ்ட: ।
கேயூரவாந் மகரகுண்டலவாந் கிரீடீ
ஹாரீ ஹிரண்மயவபுர் த்ருதசங்கசக்ர: ॥

சூரிய மண்டலத்தின் நடுவிலிருப்பவனாய், கமலாஸனத்தில் எழுந்தருளியிருப்பவனாய், தோள்வளை, மகர குண்டலம், கிரீடம், ஹாரம் ஆகியவற்றை உடையவனாய், பொன்மயமான திருமேனியை உடையவனாய், சங்கு சக்கரங்களை தரித்திருப்பவனான நாராயணன் எப்போதும் தியானிக்கத்தக்கவன்.

- ஆக்நேய நாரஸிம்ஹபுராணம்
(ஸந்த்யாவந்தந பாஷ்யம்)

# பஞ்ச கவ்வியம்



நமது இந்து சம்பிரதாயத்திலும், தர்ம சாஸ்த்திரங்களிலும், புராணங்களிலும், இதிகாசங்களிலும், பசுவை மேன்மையானதாகப் பறை சாற்றப் படுகிறது. பசுவின் மூலமாக கிடைக்கக் கூடியதே பஞ்ச கவ்வியமாகும். பால், தயிர், நெய், கோஜலம் (கோமூத்திரம்), கோமலம் (சாணம்) என்ற இந்த ஐந்து பொருட்களும் பசுவிடமிருந்து கிடைப்பதால் இவற்றை பஞ்ச கவ்வியம் என்பர்.

அனைத்து தேவதைகளுக்கும் விருப்பமானது பசும்பாலே ஆகும். பஞ்சாமிர்தமில்லா அபிஷேகமே கிடையாது. அந்த பஞ்சாமிர்தத்தில் கலப்பதே இந்த பசுவின் பால் தான். பாவம் செய்தவர்கள் தங்களின் பாவத்தை போக்க பசுவின் பஞ்ச கவ்வியத்தையே நாடுவர். முதன் முறையாக புது வீட்டிற்குச் செல்லும் பொழுது பசும்பாலை காய்ச்சி பொங்க வைப்பதும், சூரியனுக்கு பசும்பாலை பொங்க வைத்து பூஜிப்பதும் நம்முடைய பண்பாடாகும்.

பசுவின் தயிரும், மோரும் பசியைத் தூண்டும். செரிமான சக்தியை அதிகரிக்கும். வெள்ளி பாத்திரத்தில் வைக்கும் தயிர் நன்றாக இருக்கும். இறைவனுக்கு அபிஷேகம் செய்யும் பஞ்சாமிர்தத்திலும் பசுவின் தயிரைத்தான் சேர்ப்பார்கள். பசுவின் தயிரில் கொழுப்பு இருக்காது. நோய் எதிர்ப்பு சக்தியும் கொண்டது.

பசுவின் நெய்யில் யாகம் செய்யும் பொழுது அதிலிருந்து வரும் புகை செல்லும் இடங்களில் வியாபித்துள்ள கிருமிகள் எல்லாம் அழிந்து விடும். பசுவினுடைய நெய்யில் செய்யும் யாகமே முழுமையான வெற்றியை அளிக்கின்றது. காற்றில் கலந்துள்ள மாசுக்களுக்கு பசுவின் நெய்யால் செய்யப்படும் யாகமே சிறந்ததாக அமைகிறது.

இறைவனின் படைப்பில் எந்தவொரு உயிரினத்தின் கழிவுகளுக்கும் முக்கியத்துவம் அளிப்பதில்லை. பசுவின் கழிவுகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கின்றனர். ஆதலால் தான் பசுவை "ஜகன்மாதா" என்கிறோம். யாகம் செய்யப்படும் இடமும் பசுஞ்சாணத்தாலும், கோமியத்தாலும், கோஜலத்தாலும் தான் சுத்தம் செய்யப்படுகிறது. இது கிருமி நாசினியாகவும் பயன்படுகிறது. ஆகவேதான் கோஜலத்தை பவித்திரமானதாகப் பாவிக்கின்றனர்.





**பசுவைக் காப்போம்!**

**நலம் பெறுவோம்!!**









நன்கொடைகளுக்கு வருமான வரிச் சட்டம் 1961-ன்படி 80 ஜி. (5) (ஸஷ்) வருமான வரி விலக்கு உண்டு

**ஸ்ரீவேங்கடேஸ்வரா கோசம்ரக்ஷண சாலை, திருப்பதி**

தி.தி.தே. பசுக்களை பாதுகாப்பதற்காக "ஸ்ரீவேங்கடேஸ்வரா கோ சம்ரக்ஷணா அறக்கட்டளை" நிறுவி, பக்தர்களும் நன்கொடைகளை வழங்குவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தினர். நன்கொடை ரூ.1,000/- குறையாமல் செயலாட்சித் தலைவர், எஸ்.வி.ஜி.எஸ்.டி., தி.தி.தே. திருப்பதி எனும் பெயரில் வங்கி வரைவோலையை எடுத்து, இயக்குனர், ஸ்ரீவேங்கடேஸ்வரா கோசம்ரக்ஷணா டிரஸ்ட், ஸ்ரீவேங்கடேஸ்வரா கோசம்ரக்ஷண சாலை, தி.தி.தே. எஸ்.வி.யூ. தபால், திருப்பதி - 517 502 எனும் முகவரிக்கு அனுப்பவும்.




வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

பிப்ரவரி 2022

மலர் 01
இதழ் 07


## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| திருமலையில் இரதசப்தமி திருவிழா – திரு. அத்தி ரங்கராஜன், திருப்பதி. | 7 |
| திருச்சானூர் ஆலய விசேஷங்கள் – திருமதி லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி, திருப்பதி. | 10 |
| திங்கள் தோறும் ஒரு திருவேங்கடப் பாசுரம் : வேங்கடவனுக்குப் பாட்டு பிடிக்குமா? – பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 14 |
| தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன் – திரு. வி. வேங்கடரமணா, திருப்பதி. | 17 |
| ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள் : ஸர்வபூதேஷுஹிதன் – திரு. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி, சென்னை. | 20 |
| திருவேங்கடவன் திருவருள் – திருமதி எம். ராஜகுமாரி, ஆரணி. | 22 |
| ஜோதிட சாஸ்திரம் : வாஸ்து சாஸ்திரம் –முனைவர் ஆ.முத்துகிருஷ்ண ஆச்சாரி, சென்னை. | 24 |
| நாம நீராஜனம் –திருமதி ராஜலக்ஷ்மி, கேரளா. | 31 |
| யோக சாஸ்திரம் : சூரிய நமஸ்காரமும் யோகாசனங்களும் – டாக்டர் கி.ஐ. நிகிலாவெங்கட், கோயம்பத்தூர். | 35 |
| 108 திவ்யதேச வைபவம் – திருமூழிக்களம் – உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 37 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் – உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 40 |
| ஸ்ரீமத் பகவத்கீதை – டாக்டர் சி.கோவிந்தசாமி, புத்தூர். | 42 |
| அலசுவோம் அறிவோம் ஆதிகாவிய நாயகர்களை : சுக்ராச்சாரியார்–தேவயானி–கசன் – திரு. சத்யதாரா, சென்னை. | 44 |
| கண் கண்ட தெய்வம் ஸ்ரீசூரிய பகவான் – திரு.நெய்வாசல் நெடுஞ்செழியன், சிதம்பரம். | 48 |
| நீதிக்கதைகள் : பக்தியின் ரகசியம் – திரு. ஜி.வேலாயுதம், சேலம். | 51 |
| சித்திரக்கதை : ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி | 52 |


### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : சூரியப்பிரபை வாகனத்தில் திருமலையப்ப ஸ்வாமி, திருமலை.

பின்னட்டை : ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி, ஸ்ரீநிவாசமங்காபுரம்.


*சிறப்பு ஆசிரியர் :*
Dr. K.S.ஜவஹர் ரெட்டி, ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K.ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. பி.ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
*புகைப்படங்கள் :*
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



*பிரதிகளுக்கு:*
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360



நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.orgயில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/ கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri.helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |



இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்

# ஆதித்யனை ஆராதிப்போம்!

உலகமனைத்தையும் தாமே படைத்து, காத்து, அழித்தலாகிய முத்தொழில்களையும் நீங்காத முடிவில்லாத விளையாட்டுகளாக கொண்டுள்ளவன் அப்பரம்பொருள். அதாவது தாமே என்பது பிற தேவதைகளைக் கொண்டு, தாமே அப்பணியை செய்வதாகும். அவ்வகையில் இந்த உலகம் இயங்குவதற்கு என சூரிய, சந்திரர்களை அப்பரந்தாமன் நியமித்து உள்ளான் என்றால் அது மிகையாகாது. மானிடரின் கண்களுக்கும் புலப்படாத வகையில் அப்பரம்பொருள் இருப்பதாகவும் பெரியோர் கூறுவர். மேலும், அப்பரம்பொருளே அறியாமையாகிய இருளில் உறங்கிக் கொண்டிருக்கும் ஜீவாத்மாக்களை அனுதினமும் எழுப்பி வெளிச்சத்திற்கு கொண்டு வரும் நாராயணனே சூரிய பகவான்.

உலகில் கண்கூடாக பார்க்கக் கூடிய கடவுள் சூரியன் தான். சூரியன் இல்லாது இந்த உலகில் எச்செயலும் நடைபெறாது. சூரியன் இல்லாது உயிரினங்கள் வாழாது. சூரியன்தான் உலகின் கண் ஆவார். சூரியனிடமிருந்து தான் உலகமே உண்டாயிற்று. அவன் பரபிரம்ம வடிவினன். அவனின்றி ஓர் அணுவும் அசையாது. சூரிய வழிபாட்டினால்தான் பரம்பொருளை அடைய முடியும். நமஸ்காரப்பிரியன் அவன். ஆகவேதான் மூன்று வேளை செய்யக்கூடிய சந்தியா வந்தனத்தில் சூரியனை காயத்ரி தேவியின் உருவில் வழிபட வைத்துள்ளனர் நம் பெரியோர். மகாகவி பாரதியாரும் *“ஆதித் தாய் தந்தை நீவிர் உமக்கே ஆயிரம் தரம் அஞ்சலி செய்வேன்”* என்று குறிப்பிடுகிறார்.

எல்லையற்ற இப்பிரபஞ்சத்திலிருக்கும் பலகோடி நட்சத்திரங்களுள் பூமிக்கு மிக அருகில் இருக்கும் நட்சத்திரம் சூரியன். சூரிய குடும்பத்தில் இருக்கும் பூமி சூரியனை சுற்றிவர ஆகும் காலம் 12 மாதங்கள், ஒவ்வொரு மாதமும் நமது பூமி, ஜோதிடத்தின் வாயிலாகப் பார்த்தாலும், அறிவியல் வாயிலாகப் பார்த்தாலும் பிரபஞ்சத்தில் காணப்படும் நட்சத்திரங்களை பின்னணியாகக் கொண்டு வகுக்கப்படும் நீள்வட்ட பாதையில், பூமியின் சுழற்சி பாதை 12 விரிவான பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதன் பின்னணியே 12 ராசிக் கூட்டங்களாகும். ராசிக் கூட்டங்களின் பின்னணி 27 நட்சத்திரங்களின் கதிர்களினால் தாக்கப்படும் கால அளவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவையே 12 மாதங்கள்.

ஒவ்வொரு மாதத்தின் கால அளவிலும் சூரிய பகவானின் அபரிமிதமான சக்தி, 12 கோணங்களின் தனது சக்தியை பூமியில் குவித்து உயிர்களின் மீதும், பஞ்ச பூதங்களின் பரப்புகளிலும் ஊடுருவி பலவித மாற்றங்களை நிகழ்த்துகின்றது. இது போன்ற தெய்வீக சக்தியின் சஞ்சார தத்துவத்தையே இராமாயண காலத்தில் அகத்திய மகரிஷி ஸ்ரீராமனுக்கு கூறும்போது *“நக்ஷத்ரக்ரஹதாராணம் அதிபோ விச்வ பாவன:| தேஜஸாமபி தேஜஸ்வீ த்வாதஷாத்மன் நமோஸ்துதே ||”* (ஆதித்ய ஹ்ருதயம்–15) சூரிய பகவான் நட்சத்திரங்களுக்கும், கிரகங்களுக்கும் தலைவர். அவரே இந்த அகிலத்தை காக்கிறார். கதிரவனின் பனிரெண்டு உருவிலும் ஒளிமயமாக இருக்கிறார். சூரிய பகவானே உனக்கு நமஸ்காரம் என்கிறார்.

இது தவிர முப்பத்து முக்கோடி தேவர்கள் என்று பல இடங்களில் சுட்டிக்காட்டப்படுகின்றது. அவற்றிலும் துவாதச ஆதித்யர்கள் என்று 12 ஆதித்யர்களை காண்கிறோம். அதாவது ஏகாதச ருத்திரர்கள் 11, துவாதச ஆதித்யர்கள் 12, அஷ்ட வசுக்கள் 8, அச்வினி தேவர்கள் 2 ஆவர்.

எனவே, இவ்வுலகிற்கே இருளைப் போக்கி ஒளி தரும் சூரிய பகவானை அனுதினமும் நாம் சூரிய உதய நேரத்தில் வழிபட்டு ஆரோக்கியம் பெறுவோம்.

# திருமலையில் இரதசப்தமி திருவிழா

திரு.அத்தி. ரங்கராஜன்,
திருப்பதி.
98490 99246

அடியார்களை அரவணைத்து, யோகிகளுக்கு ஆதரவளித்து, அரக்கர்களை அழித்து, மக்களை காக்க, தர்மத்தை நிலைநாட்ட சங்கு சக்கரதாரியாக கருட வாகனத்தின் மேலேறி ஓடிவரும் திருமாலைக் காண எத்தனை எத்தனை கண்கள் இருந்தால் மட்டும் போதும்?.

அந்த கண்கொள்ளாக் காட்சி எப்படி இருக்கும் என்றறிய மோக்ஷம் பெற்ற கஜேந்திரனையோ அல்லது அவன் வருகைக்காக காத்திருந்த சூடிக் கொடுத்த சுடர்க்கொடியான கோதையையோ கேட்க வேண்டும். இல்லையேல் அவனின் கடைக் கண் பார்வைக்காக தவமிருந்த கோடானுகோடி முனிவர்களை கேட்க வேண்டும். இவை ஏதும் இயலவில்லையெனில் இரதசப்தமியன்று திருமலை சென்று அந்த மலையப்பனை சேவிக்க வேண்டும்.

ஒரேநாளில் ஏழுமுறை, ஏழு வெவ்வேறு வாகனங்களில் பவனிவரும் மலையப்பனின் பொன்னிறமேனி, பட்டாடை மற்றும் தங்க ஆபரணங்களுடன் மிளிரும் காட்சியை கண்டு களிக்கும் அந்த அரிய வாய்ப்பு பக்தர்களுக்கு இன்று ஒரேநாள் தான் கிடைக்கும். சூரியப்பிரபையில் ஆரம்பித்து, சின்ன சேஷவாகனம், கருடவாகனம், ஹனுமந்த வாகனம், சர்வபூபால வாகனம், கற்பகவிருக்ஷ வாகனம் என்று நடந்து கடைசியில் சந்திரப்பிரபையுடன் இந்த திருவீதி உலா முடிவடையும்.

இரதசப்தமி என்பது தைமாத சுத்த சப்தமி திதியன்று எல்லா வைணவத் திருக்கோயில்களிலும் விசேஷமாக நடைபெறும் உற்சவம். இது திருமலையில் 1564 ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டில் முதன்முதலாக காணப்பெற்றது. அதற்கு முன்னரே இந்த உற்சவம் நடைமுறையில் இருந்திருந்தாலும் 1564ஆம் ஆண்டில்தான் இதற்கான முதல் கொடை வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று வரலாற்று வல்லுனர்கள் கருதுகிறார்கள்.

1538ஆம் ஆண்டில் திருவனந்தாழ்வான் குப்பையன் பக்தர் 700 காசுகள் கொடையாக வழங்கி, அதிலிருந்து வரும் ஆதாயத்தை வைத்துக் கொண்டு கீழ் திருப்பதி கோவிந்தராஜர் கோயிலில் ஆண்டுதோறும் தைமாதம் சப்தமி திதி அன்று இரதசப்தமி விழாவை விமரிசையாகக் கொண்டாட வேண்டுமாய் பிரார்த்தித்து இருந்தார். அதன்படியே இந்த உற்சவம் திருமஞ்சனத்தில் தொடங்கி சூரியப்பிரபையின் மேல் கோவிந்தராஜ பெருமாள் உலா வருவதாக ஆரம்பித்து வைத்தனர்.

ஆனால் திருமலையில் 1564ஆம் ஆண்டிற்கு முன்னதாக இந்த விழா நடைபெற்றதற்கான சான்றுகள் இல்லை. அதே ஆண்டு கருணிக்கர் அப்பலய்யர் என்கிற வள்ளல் கண்டிக் கோட்டை சீமையைச் சேர்ந்த செங்கல்லேறு என்ற கிராமத்தை கொடையாக வழங்கி, அதிலிருந்து வரும் வருடாந்திர வருமானமான 150 ரெக்கை பொற்காசுகளிலிருந்து ஒரு சிறிய தொகையை வைத்து திருமலையில் இரதசப்தமி விழாவை



நடத்துமாறுக் கேட்டுக் கொண்டுள்ளார். கீழ் திருப்பதியில் இரதசப்தமி விழா முதலில் தொடங்கப் பட்டாலும் திருமலையில் தான் மிகவும் விமரிசையாக வும், பக்தர்களின் ஆரவாரத் துடனும் நடைபெறும். சூரியப் பிரபை வாகனத்தின் மேல் பெருமானை அமர்த்தி ஊர் வலம் வரும் நிகழ்ச்சி நாள டைவில் பற்பல வாகனங் களை ஒவ்வொன்றாகக் கூட்டிக் கொண்டு இன்று ஏழாம் (சப்தமி) திதிக்கு ஈடாக ஏழு வாகனங்களை ஒரே நாள் நடத்தும் விதமாக வளர்ந்துள்ளது.

திருமலையில் வழிபட வரும் ஒரு பக்தனின் வாழ் வில் இந்த ஒருநாள் எதிர் பார்த்திராத பிரம்மிப்பை உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை. மலையப்பன் ஏழு வாகனங்களில் திருமாடவீதிகளில் ஊர்வலமாய் வருவது இந்த ஒரேநாளில்தான். பலநாட்கள் நடைபெறும் பிரம்மோத்சவத்தைக் கண்ட பலனும், ஒரேநாளில் லக்ஷகணக்கான பக்தர்களின் கண்களுக்கு விருந்தளித்து அவர்களை பக்தி பரவசமாக்கும் இந்த விழாவை, சிறிய பிரம்மோத்சவமாக வர்ணிப்பதுண்டு. இந்த நாளன்று திருமலை வந்தடையும் பக்தர்களுக்கு திருமலை–திருப்பதி தேவஸ்தானத்தி னர் சிறப்பான வசதிகள் செய்வர். பெருமானின் வருகையை எதிர்பார்த்து மாடவீதிகளில் காத்திருக்கும் பக்தர்களுக்கு நிழல், குடிநீர், பால், பலகாரம் போன்ற அனைத்து ஏற்பாடுகளும் செய்து நாராயண அடியார்களுக்கு சேவை செய்வர்.

திருச்சானூரில் பத்மாவதி தாயார் திருக்கோயிலின் ஓர் அங்கமாக சூரிய நாராயணன்கோயில் இருப்பதனால், இங்கும் சூரியனுக்கு ஊர்வலம் உண்டு. சூரிய உதயத்திற்கு முன்னதாகவே இங்கு சூரியபகவான் குதிரை வாகனத் தில் உலாவந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பது ஒரு விசேஷம். பத்மாவதி தாயாரின் திருவீதியுலா திருமலைப் போலவே விமரிசையாக ஏழு வாகனங்களில் நடைபெறும். அதேபோல திருப்பதியிலுள்ள கோதண்ட ராமர் கோயிலிலும் சில ஆண்டுகளுக்கு முன்னர் இவ்விழா தொடங்கி வைக்கப்பட்டது. சூரிய வம்சத்தைச் சேர்ந்த சக்கரவர்த்தி திருமகன் சூரியப்பிரபையில் உலா வருவது மிகவும் விசேஷமாகக் கருதப்படுகிறது.



சூரிய வழிபாடு என்பது நமது வேத வழிமுறையில், இந்திய கலாச்சாரத்தில் ஓர் அங்கம். சூரியனை விஷ்ணுபகவானின் அம்சமாகக் கருதி, அவரை சூரிய நாராயணனாய் தொழும் சம்பிரதாயம் நம்முடையது. இரதசப்தமி அன்று ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் வானுலகத்தில் பவனி வருவதாக ஐதீகம். பன்னிரண்டு ராசிகளைக் குறிக்கும் விதமாக பன்னிரண்டு சக்கரங்கள் பொருத்திய ஓர் மிகப்பெரிய தேரை ஓட்டி உலகத்தை சுற்றிவர அவர் வலம் வரும் காலம் ஒரு







வருடமாய் நிர்ணயிக்கப்படுகிறது. புராணங்களின் படி காஷ்யப முனிவருக்கும் அவர் மனைவி அதிதிக்கும் மகனாய் இவர் அவதரித்த இந்த நாளை சூரிய ஜெயந்தி என்றும் கொண்டாடுவது வழக்கம்.

இந்துக்கள் மிகவும் புனிதமாகக் கருதும் இந்நாளில் சிலர் விரதம் அனுஷ்டிப்பதும் உண்டு. காலையில் எழுந்தவுடன் எருக்கன் இலைகளை தலைமீதும், தோளின் மீதும் வைத்து அதற்கான மந்திரங்கள் ஓதி நீராடுவது வழக்கம். நவக் கிரகங்களின் நாயகனாய் கருதப்படும் சூரியன் தீமைகளை விலக்கி நன்மைகளை செய்வாரென்பது நம்பிக்கை.

இரதசப்தமி என்பது ஆன்மீகமும் அறிவியலும் இணைந்த ஒரு நிகழ்வு. கிழக்கில் உதயமாகி மேற்கில் அஸ்தமிக்கும் சூரியன் தனது பயணத்தை சற்றே வடக்கு நோக்கி (உத்தராயணம்) செல்வதை இந்த நாளில் தொடங்குவதைக் காணலாம். இதனால் சூரிய ஒளி வடகிழக்கு நோக்கி சாய்வதை இந்நாளிலிருந்து காணலாம். இதையே அறிவியல் சார்ந்தவர்கள் பருவநிலை மாற்றங்கள் ஆரம்பமாகும் நாளாக கணித்திருக்கிறார்கள். தை மாத பிறப்பில் அறுவடையை முடித்த உழவர்கள் வசந்த காலமான சித்திரையின் வரவை நோக்கி இருக்கும் காலமிது. இந்தியாவின் பல மாநில மக்கள் தங்களது புத்தாண்டை சித்திரை மாதத்தில்தான் கொண்டாடுகின்றனர். தை, சித்திரை மாதங்களின் இடையேயான காலத்தில்தான் இரதசப்தமி வரும். பருவநிலை மாற்றம் கொண்டுவரும், செல்வ செழிப்புத் தரும், நல்ல நேரத்தின் ஆளுமை அதிகரிக்கும் என்பது மக்களின் தொன்று தொட்டு வரும் நம்பிக்கை மட்டுமல்ல, நிரூபணம் ஆன உண்மையுங்கூட.

ஆயிரக்கணக்கான பக்தர்கள் மஞ்சள் ஆடை உடுத்தி வெவ்வேறு ஊர்களிலிருந்து பஜனை செய்துக் கொண்டே திருமலைக்கு வந்தடைந்து திருமாலை சேவிப்பது பல நூற்றாண்டுகளாக நடைமுறையில் இருக்கும் வழக்கமாகும். ஆழ்வார்கள் அனுபவித்ததைப் போல கண்ணனின் திருநாமத்தையே உண்ணும் சோறாகவும், பருகும் நீராகவும், தின்னும் வெற்றிலையாகவும் கருதி உபவாசம் இருக்கும் பக்தர்கள் திருமாலின் திருநாமத்தை ஜெபித்துக் கொண்டே இரதசப்தமி அன்று திருமலை மாடவீதிகளில் வந்தடைவர். அங்கு மாடவீதிகளில் காத்திருந்து சுவாமியின் வாகனங்களின் அணிவகுப்பைக் கண்டு மகிழ்வர். நாராயணனை சரணம் புகுவர். அரியனையில் அமர்ந்தவன் தொன்று தொட்டு அறியாதவர் வரை அனைவரையும் சமமாக அருள்பாலிக்கும் அந்த திருவேங்கடமுடையான் திருவடியை தொழுது உலகம் நலம்பெற பிரார்த்திப்போம்.











# திருச்சானூர் ஆலய விசேஷங்கள்

- திருமதி லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி, திருப்பதி.

*''பத்ம ப்ரியே பத்மினி பத்மஹஸ்தே*
*பத்மாலயே பத்மதளாயதாக்ஷி*
*விச்வப்ரியே விஷ்ணு: மனோனுகூலே*
*த்வத்பாத பத்மம் மயி ஸன்னிதத்ஸ்வ:''*

தாமரைப் பூவின் மேல் வீற்றிருக்கும் தாயார் என்பதால் “அலர் மேல் மங்கை'' எனவும், ஆயிரம் இதழ்களை உடைய பொற்றாமரை மலரின் மீது தோன்றியதால் “ஸ்ரீபத்மாவதி” எனவும் அழைக்கப்படுகிறார். இந்த திருச்சுகனூர் எனப்படும் திருச்சானூரில் தனியாட்சி செய்யும் தாயார், திருமலைராயனின் பட்டத்து ராணி. இந்த ஆலயத்தைப் பற்றி பக்தர்கள் நாம் எவ்வளவோ அறிந்திருக்கிறோம். இந்த கட்டுரையில் நாம் அறியாத சில விஷயங்களையும், திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் சார்பில் தாயாருக்கு நடைபெறும் வழிபாடுகளிலும் நிர்வாக முறைகளிலும் புதியதாக சேர்க்கப்பட்டிருக்கும் சில தகவல்களையும் அறிந்து கொள்ளலாம்.

## சாந்தி நிலையம்

திருமலையப்பனின் ஆலயம் ஆனந்த நிலையம் என்றும், விமானம் ஆனந்த விமானம் என்றும் போற்றப்படுவதைப் போல, தாயார் நித்யவாசம் செய்யும் சன்னதி “சாந்தி நிலையம்” என்றும், விமானம் “சாந்தி விமானம்” என்றும் அழைக்கப்படுகிறது. இதற்கு முக்கிய காரணங்கள் உண்டு. ஏழு மலைகளின் உயரத்தை கொண்ட ஒரு மலையின் மீது “சாந்தி நிலையம்” என்கிற தங்க மாளிகையில் தாயார் குடி கொண்டதாகவும், ஆனந்த நிலையவாசனை விட தாயாரின் கருணை அதிகப்படியாக இருந்ததால் பாரம் தாங்காமல் அது கீழே இறங்கி திருச்சானூரில் நின்று விட்டதாகவும் கூறப்படுகிறது.

தாயார் தாமரை மலரில் வீற்றிருந்து திருக்கரத்தில் அபய முத்திரையோடு பக்தர்களை தன்னிடம் வரவழைத்து அவர்களின் கோரிக்கைகளை வேண்டுகோள்களை தான் முதலில் கேட்டு, பின்பு எம்பெருமானின் திருமார்பில் வியூக லக்ஷ்மியாக வீற்றிருந்து அவரது பார்வை பக்தர்களின் மீது படும்படி செய்கிறாளாம். நமக்கு ஆனந்தம் வரவேண்டுமானால், முதலில் மனதுக்கு சாந்தி வேண்டும் அல்லவா. அந்த மனசாந்தியை அளிப்பவள் தாயார்தான்.

எத்தனையோ மன சஞ்சலங்களோடு பக்தர்கள் திருமலை திருப்பதிக்கு யாத்திரையாக வருகிறார்கள். அவர்கள் முதலில் திருச்சானூருக்கு வந்து தாயாரை தரிசித்ததும், தாயார் அவர்களது குழப்பங்களை நீக்கி, முதலில் மனதை அமைதியடையச் செய்கிறாள். தாயாரின் கருணா கடாக்ஷம் அவர்களின் மேல் விழுந்ததும், அவர்களின் மனது சாந்தியடைந்து, நிம்மதியாக திருமலைக்குச் சென்று, திருமலையானை தரிசித்து, வேண்டிய வரங்களைப் பெற்று ஆனந்தம் பெறுகிறார்கள். ஆகவே தான் அது ஆனந்த விமானம். இது சாந்தி விமானம். விமானத்தில் “விமான லக்ஷ்மி” யைத் தரிசிக்கலாம்.

## ஆலய சன்னதிகள்

தற்போது நாம் ஸ்ரீபத்மாவதி தாயாரை சேவிக்கும் திருச்சானூர்





ஆலயத்தில் ஆதியில் இருந்த சன்னதி ஸ்ரீவேணு கோபாலன் சன்னதி. இந்த சந்நதிக்கு முன்பாக இருக்கும் மண்டபத்தில் தான் ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு, அவளது மணாளரான ஸ்ரீநிவாசப் பெருமாளோடு, பக்தர்களின் வேண்டுகோளின்படி நித்ய கல்யாண உற்சவம் நடைபெறுகிறது. புராணத்தின்படி, மகாபாரதப் போர் முடிந்ததும், பலராமர், ஸ்ரீகிருஷ்ணர் மன சாந்தி வேண்டி தீர்த்த யாத்திரை வரும்போது, இந்த திருச்சானூர் எனப்படும் திவ்ய தலத்தில் குடியிருந்த சுக முனிவரின் ஆசிரமத்திற்கு விசேஷ விருந்தாளிகளாக வருகை தந்தனர். அவர்களை வரவேற்று உபசரித்த சுகமுனிவர் அவர்களை இந்த ஆலயத்தில் தங்கியிருக்கும்படி வேண்டிகொள்ள, அவர்கள் இருவரும் அர்ச்சா ரூபிகளாக தரிசனம் தந்தார்களாம். அவர்களுக்கு சன்னதி அமைத்து சுகமுனிவர் மகிழ்ந்து கொண்டிருந்தாராம்.

யாத்திரையாக வந்ததால் அவர்களது திருப்பாதங்களில் பாதுகைகள் இருப்பதை இன்றும் காணலாம். ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமப்படி பூஜைகள் நடைபெற்று வருகின்றன. மாதாமாதம் ரோஹிணி நட்சத்திர சுபதினத்திலும், ஸ்ரீகிருஷ்ண ஜன்மாஷ்டமி திதியிலும் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன. அந்த சுக முனிவரின் பெயராலேயே இந்த தலம் திருச்சுகனூர் என்றழைக்கப்பெற்று பின்னாளில் திருச்சானூர் என அழைக்கப் பெற்றதாம்.

தாயாரின் இந்த ஆலயத்திற்குள் இருக்கும் இன்னொரு சன்னதி ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி சன்னதி, 1547ஆம் ஆண்டு கண்டெடுக்கப்பட்ட ஓலைச் சுவடிகள் மூலம், ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமியின் மூர்த்தி மறைந்து ஒருவரின் மூலம் கிடைக்கப்பெற்று, அவர் இந்த சன்னதியை சீரமைத்து அதில் பிரதிஷ்டை செய்ததாகக் கூறப்படுகிறது. இங்கும் ஸ்ரீபாஞ்சராத்ர ஆகமப்படி பூஜாக்ரமங்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு மாதமும் உத்திரட்டாதி நட்சத்திரத்தன்று விசேஷ அபிஷேகமும், ஆவணி மாதத்தில் அவதார உற்சவமும் நடைபெறுகிறது. இந்த சன்னதிக்கு முன்பாக உள்ள மண்டபத்தில் தற்போது திருமலை திருப்பதி தேவஸ்தானம் "துலா பாரம்" அமைத்திருக்கிறார்கள்.





திருமலையில் திருமலையானின் ஆனந்த நிலையத்தில் நடைபெறுவது போல, பக்தர்கள் இங்கும் தங்களின் வேண்டுதலின்படி எடைக்கு சமமாக தங்கள் காணிக்கைகளை வழங்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

திருவேங்கடத்து எம்பெருமான் தனக்கு நடைபெறும் அனைத்து விசேஷங்களும் தனது பிராண நாயகியான ஸ்ரீபத்மாவதி தாயாருக்கும் நடைபெற வேண்டும் என்று கட்டளை பிரப்பித்திருக்கிறார் அல்லவா.


## உற்சவம்

தற்போது தாயாருக்கும் உற்சவ விசேஷங்களைக் கூட அதிகப்படுத்தி உள்ளார்கள். நித்யப்படி கல்யாண உற்சவம் நடைபெறுவதோடு, திங்கட்கிழமை காலை அஷ்டதள பத்ம பாத ஆராதனை, புதன் கிழமை சத கலசாபிஷேகம் (இந்த மங்கள வேலையில் தாயாருக்கு சதநாம அர்ச்சனையும் நடைபெறும்), வியாழக்கிழமை திருப்பாவாடை (நைவேத்யம் செய்யப்படும் புளியோதரையை தாயார் சன்னதிக்கு முன்பாக அம்பாரமாகக் குவித்து ஆரத்தி செய்யப்படும்), வெள்ளிக்கிழமை தோட்டோத்ஸவம் அதாவது அபிஷேகம்.

கோயிலிலிருந்து 100 அடி தூரத்தில் ஒரு தோட்டம் உள்ளது. இதை "தோழப்ப பூங்கா" என்றும், வெள்ளிக்கிழமை தோட்டம் என்றும் அழைப்பார்கள். பூந்தோட்டத்தின் நடுவில் பதினாறு தூண்களோடு ஒரு வசந்த மண்டபம் இருக்கிறது. பிரதி வெள்ளிக்கிழமை தாயாரின் திருமஞ்சனம் இங்கு தான் நடைபெற்று கொண்டிருக்கிறது.


தற்போது இந்த கொரோனா தொற்று காரணமாக தாயாருக்கு திருமஞ்சனம் ஆலயத்தின் உள்ளேயே கல்யாண உற்சவம் நடைபெறும் மண்டபத்தில் நடைபெறுகிறது. இது முடிந்ததும் தாயாருக்கு அன்று மாலை சஹஸ்ர தீபாலங்கார சேவை எனப்படும் ஊஞ்சல் சேவை நடைபெறும். இந்த ஊஞ்சல் சேவையும் ஆரம்பத்தில் ஆஸ்தான மண்டபத்தில் நடைபெற்று கொண்டிருந்தது. சனிக்கிழமை தோறும் சாமவேத புஷ்பாஞ்சலி நடைபெறுகிறது. பண்டிதர்கள் சாமவேதம் ஓத, புஷ்பங்களால் தாயாருக்கு அர்ச்சனை நடைபெறும்.


## நைவேத்யம்




நைவேத்யம் விஷயங்களிலும் ஆரம்ப காலத்தில் புளியோதரை, ததியோதனம், சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கல், ரவை கேசரி ஆகியவைகளையே சமர்ப்பித்து கொண்டிருந்தார்கள். அதிலும் வெள்ளிக்கிழமை புளியோதரை மிகவும் விசேஷம். ஆனால், தற்போது மதிய வேளையில் லட்டு, வடைகளை நிவேதனம் செய்கிறார்கள். இந்த லட்டு திருமலையில் செய்வது போல் பூந்தி சலித்து செய்யும் லட்டு அல்ல. சுத்தமான கடலை மாவை பசு நெய்யில் பொன்னிறமாக வறுத்து, சர்க்கரை பாகில் சேர்த்து பிடிக்கிறார்கள். இதை அமிர்த கலசம் என்று போற்றுகிறார்கள். கல்யாண உற்சவத்தின் போது லட்டு, அப்பம், சர்க்கரை





















**பக்தர்கள் கவனத்திற்கு**

**ஸ்வாமி தரிசனத்திற்கான டிக்கெட்டுகள் பெற்ற பக்தர்கள் மட்டுமே திருமலைக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர்.**







பொங்கல், புளியோதரை நிவேதனம் பண்ணி வேண்டி கொண்ட பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்குகிறார்கள். ஊஞ்சல் சேவையில் சுண்டல், திருப்பாவாடை சேவையில் புளியோதரை, ஜிலேபி, சமர்ப்பிக்கப்படுகிறது. வெள்ளிக் கிழமை திருமஞ்சனத்துக்குப் பின் கண்ணமுது என்கிற பால் பாயசம், பானகம், பொங்கல் சமர்ப்பிப்பர். அலங்காரத் திற்குப் பிறகு புளியோதரை, தோசை, சுண்டல் நிவேதனம் செய்யப்படுகிறது. நிவேதனத்திலும், திருமலைக்கு நிகராக திருச்சானூரில் தாயாருக்கு கண்டருளப்பண்ணி விட்டு, பக்தர்களுக்கு வழங்கப்படுகின்றன.

தாயாருக்கு நடைபெறும் கார்த்திகை பிரம்மோத்ஸ வத்திலும் 8ம் நாள் காலை மரத்தாலான திருத்தேர் உற்சவம் தான் பல வருடங்களாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனால் சமீப காலங்களில் திருமலை திருப்பதி தேவஸ்தானம் திருமலையில் நடைபெறுவது போலவே தாயாருக்கும் 6ம் நாள் மாலை தங்கத்தேரில் எழுந்தருளப் பண்ணி வீதி உலா வருகின்ற நடைமுறையைக் கொண்டு வந்துள்ளார்கள். ஆண்டுக்கு மூன்று முறை தாயார் தங்கத் தேரில் எழுந்தருளுகிறாள். பிரம்மோத்ஸவத்தின் ஆறாம் நாள் கருட வாகனத்திற்கு முன்பாகவும், வசந்தோத்ஸவத் தின் இறுதி நாளான வைகாசி பௌர்ணமியன்றும், வரலக்ஷ்மி விரத பூஜையின் மாலை வேளையிலும் தாயார் தங்கத் திருத்தேரில் காட்சியளிப்பதை நாம் தரிசிக்கலாம்.

திருமலைக்கு செல்வதற்கு முன் திருச்சானூருக்கு வந்து பத்மாவதி தாயாரின் திருவடிகளைப் பற்றிக் கொண் டோமேனால், தாயார் நம்மை அக்கறையுடன் சம்சார கடலின் அக்கரையில் சேர்ப்பாள் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

# வேங்கடவனுக்குப் பாட்டு பிடிக்குமா?


– பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963

திங்கள்தோறும் ஒரு திருவேங்கடப் பாசுரம்

ஆண்டாள் சிறந்த பாடகி, இன்னிசையால் பாடிக் கொடுத்தவள். அவள் பாட்டுக்கு மயங்கியவன் வேங்கடவன். இன்று அதே ஆண்டாள் குயில்களிடம் பாடவேண்டாம் என்று சொல்கிறாள். என்ன காரணம்? பாசுரத்தைப்படித்தால்தான் புரியும். நாச்சியார் திருமொழியில் 10ஆம் திருமொழியில் ஒரு பாசுரம்.

*"பாடும் குயில்காள், ஈதென்னபாடல்! நல்வேங்கட*
*நாடர் நமக்கொரு வாழ்வுதந்தால், வந்துபாடுமின்,*
*ஆடும் கருளக்கொடி யுடையார் வந்தருள்செய்து*
*கூடுவ ராயிடில், கூவி, நும்பாட்டுகள் கேட்டுமே!"*

விதி என்பதற்கு பல பொருட்கள் உண்டு. முன்னரே தீர்மானிக்கப்பட்ட நியதி. பிரபஞ்ச விதிகள், அவற்றின் உறுப்புகளான இயற்கை விதிகள், அவற்றில் சிக்கி இருக்கும் மானுட வாழ்க்கையின் கோடானுகோடி நிகழ்ச்சிகள், அந்நிகழ்ச்சிகளின் இணைவுகள், பிரிவுகள் மூலம் உருவாகும் சமநிலைக் கோடே விதி, ஆணையிடுதலை விதித்தல் என்கிறோம். இப்படி இருக்க வேண்டுமென முறைப்படுத்துதல் விதி, தலையெழுத்து, ஊழ் வினை, பிராப்தம் என விதிக்கு பல பொருள்கள் உண்டு.




இப்படித்தான் வாழ்வு என்று சொல்வது போய், "இல்லை, என் வாழ்வு இப்படித்தான் அமைய வேண்டும் என்று நீ விதி" என்று விதிக்கு ஆணையிட்டு வாழ்வது உண்டு. "வேங்கடவனுக்கு என்னை விதி" என்று விதிக்கு விதி செய்தவள் ஆண்டாள் நாச்சியார். தம் நாச்சியார் திருமொழியில் தன் வாழ்வும் வளமும் எம்பெருமானுடன் மட்டும்தான் என்று உறுதிபடக் கூறுகிறாள். இது முதல் பிரபந்தமான திருப்பாவையில் அவள் சொன்னது தான்.

*"உன்தன்னோடு உற்றாமே ஆவோம்*
*உனக்கே நாம் ஆட்செய்வோம், மற்றை நம் காமங்கள் மாற்று"*

என்று சொன்னவள் அல்லவா!. நாச்சியார் திருமொழியில் தான் யாரை விரும்புகிறேன் என்று தெளிவுப்படக் கூறுகின்றாள்.

*"தையொரு திங்களும் தரைவிளக்கித்*
*தண்மண்டலமிட்டு மாசி முன்னாள்,*
*ஐயநுண் மணற்கொண்டு தெருவணிந்து*



*அழகினுக்கலங்கரித்தனங்கதேவா,*
*உய்யவுமாங்கொலோவென்று சொல்லி*
*உன்னையுமும்பியையும் தொழுதேன்,*
*வெய்யதோர் தழலுமிழ் சக்கரக்கை*
*வேங்கடவனுக்கென்ன விதிக்கிற்றியே....''*

ஆண்டாளின் வழியில் நாமும் வேங்கடவனை அடையலாம். அதற்கு அவனருள் வேண்டும் என்பதையே ஆசார்யார்கள் (உய்யக்கொண்டார்) தனியனில் கூறி இருக்கிறார்கள்.

*''சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே! தொல்பாவை*
*பாடி அருளவல்ல பல்வளையாய்! நாடி நீ*
*வேங்கடவற்கு என்ன விதி என்ற இம்மாற்றம்*
*நாம்கடவா வண்ணமேநல்கு''*

திருமண முறைகளில் பல உண்டு, அதில் ஒருமுறை: சின்னஞ்சிறு வயதிலேயே "இவன்தான் துணை" என்று மனம் நிச்சயித்துவிடும். அது மனதில் உறுதிப்படும். பிறகு எந்த வயதிலும் மாறவே மாறாது. ஆண்டாள் சொல்கிறாள்

*''சுவரில்புராண!நின் பேர் எழுதிச்*
*சுறவநற்கொடிக்களும் துரங்கங்களும்,*
*கவரிப்பிணாக்களும்கருப்புவில்லும்*
*காட்டித்தந்தேன் கண்டாய்! காமதேவா!*

*அவரைப் பிராயம் தொடங்கி என்றும்*
*ஆதரித்து எழுந்த என் தட முலைகள்,*
*துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத்*
*தொழுதுவைத்தேன்ஒல்லை விதிக்கிற்றயே''*

"சின்ன வயதிலே இந்த உடலும் உயிரும் உனக் கென்று நினைத்து விட் டேனே" நிச்சயித்த மாப் பிள்ளையை விட்டுவிட்டு வேறு யாரையும் மணம் முடித்தால், அம்மண வாழ்வு நிலைக்குமா? நிலைத்தாலும் இனிக்குமா?


தெய்வத்தின் மார்பில் சூடிய மாலை தெருவி னிலே விழலாமா! தெரு வினிலே விழுந்தாலும் வேறோர் கைத்தொட லாமா!என்றொரு பாடல், இந்த பாடலும் ஆண்டாள் நாச்சியாரின் பாடல் எதிரொலியாகவே வந்திருக்க வேண்டும்.

*'''வானிடைவாழும்வானவர்க்கு*
*மறையவர்வேள்வியில்வகுத்தஅவி,*
*கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து*
*கடப்பதும்மோப்பதும் செய்வதொப்ப,*
*ஊனிடையாழி சங்குத்தமர்க்கென்று*
*உன்னித்தெழுந்தவென்தடமுலைகள்,*
*மானிடவர்க்கென்று பேச்சுப்படில்*
*வாழகில்லேன் கண்டாய் மன்மதனே''*

இப்படி சதாசர்வகாலமும் அவனையே சிந்தித்து சிந்தித்து நாள் கடத்தும் இளமங்கையான ஆண்டாள் நாச்சியார், அவன் என்று வருவானோ என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

"ஒருநாள் வருவேன், உன்னைக் கூட்டிச் செல் வேன்" என்று அவன் இவள் மனதோடு பேசியிருக் கிறான். அந்த நம்பிக்கைதான் இவளை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. ஒருகட்டத்தில் யாரைப்பார்த்தாலும் அவர்களிடம் அவன் வருகையைக் குறித்துப் பேசத் தோன்றுகிறது. அவன் வருவானா என்பதைக் கொஞ்சம் கேட்டுச் சொல்லேன் என்று கெஞ்சத் தோன்றுகிறது.

எதிர்பார்த்தப்படி கண்ணன் வரவில்லை என்ற வுடன் பார்க்கும் பொருட்களையெல்லாம் கேட் கிறாள். காந்தள் மலர்களே கண்ணன் எங்குள் ளான்? அழகான பூக்களே! என்னை பகவா னோடு சேர்த்து வைக்கக் கூடாதா? வரு கிறேன் என்று சொன்னவன், வாரா திருக்க என்ன காரணம்? ஓஹோ! அவன் பாம்பு படுக்கையில் படுப்ப வன் அல்லவா? பாம்புக்கு உள்ள இரட்டை நாக்கு அவனுக்கும் உள்ளது போல இருக்கிறது. அதனால் தான் இரண்டு பேச்சு போலிருக்கிறது. முல்லைப் பெண்ணே! எத்தனை வெண்மை யாய் நீ இருக்கிறாய். அவன் சொன்னது பொய் என்றாலும் நான் பிறந்ததும் பொய் தானோ?





இப்படி சொல்லிக் கொண்டே வரும்போது சில குயில்கள் பாடிக் கொண்டிருக்கின்றன. ஆண்டாளுக்கு குயில்பாட்டு மிகவும் பிடிக்கும். இன்னிசையால் பாடிக்கொடுத் தவள்தானே அவள். அன்று என்னவோ அந்த குயில்களின் பாட்டுப் பிடிக்க வில்லை. "நிறுத்துங்கள் நிறுத்துங்கள்" பேரிரைச்சலாக இருக்கிறது, பாட வேண்டாம். அந்த குயில்கள் பாடுவதைத் தடுக் கின்றாள். இவளே ஒரு பாடகி, நன்றாகப் பாடக் கூடியவள். இன்னும் சொல்வதானால் இவள் பாட்டை கேட்டுத் தெரிந்துக் கொண்டு தான் குயில் களும் பாடத் தெரிந்துக் கொண்டன.

அப்படிபட்டவள் இன்று பாடவேண்டாம் என்று சொல்கிறாளே, என்ன காரணம்? ஏன் இவளுக்குப் பாட்டுப் பிடிக்கவில்லை? குயில்கள் குழம்பின. இங்கே உளவியல். பாட்டோ, உணவோ பிடிப்பதும், பிடிக்காமல் போவதும், ரசிப்பதும், ரசிக்காமல் இருப்பதும் அந்தந்த மன நிலையை பொறுத்தது தானே. வயிற்றுவலி இருக்கும்போது உண்பதற்கு வரிசையாக பதார்த்தங்களை வைத்தாலும் சாப்பிடவாத் தோன்றும்? வயிற்றுவலி தான் இன்னும் அதிகரிக்கும். அதனால் உணவின் மீது வெறுப்பு வரும். ஆனால் வயிற்றுவலி சரியாகி விட்டால் அத்தனை உணவுகளும் நாவிற்கு ருசியாக மாறிவிடும். ஆண்டாளுக்கும் இதேநிலை தான். குயில்களே இதோ பாருங்கள், இப்போது எனக்கு மனநிலை சரியில்லை,

உன் மனநிலை சரியில்லாததற்கு என்ன காரணம்? ஏன், உங்களுக்குத் தெரியாதா? நான் யாருக்காக காத்திருக்கிறேன் என்பது தெரியாதா? ஓ, கண்ணன் வருவானென்று காத்திருக்கிறாய், அவன் இன்னம் வர வில்லையா?

என்ன கேள்வி இது, வந்தால் என் மனதில் சோகம் இருக்குமா? சொன்னவன் வரக்காணோம் என்று மனம் பதறுகிறது.

இந்த நிலையில் உங்களுக்கு பாட்டு என்ன வேண்டி கிடக்கிறது. அப்படியானால் நாங்கள் பாடக் கூடாதா?. பாடுங்கள், பாடுங்கள்... நானும் கேட் கிறேன். ஆனால் வாழ்வு தருகிறேன் என்று சொன்ன அந்த வேங்கடவன் வந்த பின்னர் பாடுங்கள் நானும் கேட்கிறேன். மகிழ்ச்சியாக இருக்கும். அதுவரை உங்கள் பாட்டு எனக்கு மகிழ்ச்சியைத் தராது. இத்தனை செய்திகள் அடங்கிய அற்புதமான பாசுரம் இது.

"வேங்கடநாடார் நமக்கொரு வாழ்வுதந்தால் வந்து பாடுமின்". இங்கே "நமக்கும்" என்ற பதத்தை கவனிக்க வேண்டும். பெரியவர்கள் பன்மையில் தங்களைப் பற்றிச் சொல்லிக் கொள்வது மரபு. இரண்டாவது இங்கு நமக்கும் என்பது ஆண்டாளுக்கும், குயில்களுக்கும் சேர்த்துதான். வேங்கடவன் வந்துவிட்டால் அவனைப் பார்த்த மகிழ்ச்சியில் மனது வானில் பறக்கும். பாட்டில் லயிக்கும். இருவரும் சேர்ந்த சேர்க்கையில் கல்யாணப்பாட்டாக இந்த குயில்கள் பாடினால், அந்த குயில்களுக்கும் மகிழ்ச்சியாக இருக்கும். எனவே, இதில் இருவருக்குமான வாழ்வை அவன் வருகை தரப்போகிறது. எதிரே உள்ளவன் பாட்டுக் கேட்க தயாராக இல்லாதபோது பாடி என் செய்வது? இத்தனை நுட்பங்களையும் மனதில் வைத்துக் கொண்டு அற்புதமான பாடலை பாடியிருக்கிறாள் ஆண்டாள். மறுபடியும் பாசுரத்தைப் பாருங்கள். பாடுங்கள்

**"பாடும் குயில்காள், ஈதென்னபாடல்! நல்வேங்கட**
**நாடர் நமக்கொரு வாழ்வுதந்தால்,வந்துபாடுமின்,**
**ஆடும் கருளக்கொடி யுடையார் வந்தருள்செய்து**
**கூடுவ ராயிடில், கூவி, நும்பாட்டுகள் கேட்டுமே!"**

வேங்கடவனைக் கண்டால் குயிலுக்கு மட்டு மல்ல, நமக்கும் பாட்டுப்பாடத் தோன்றும். அதுதான் அவனுக்கு நாம் செய்யும் மங்களாசாசனம்.




# தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்

*சென்ற இதழின் தொடர்ச்சி...*

திருவேங்கடமுடையானைப் பற்றி அடுத்த 2 சரணங்களில் விவரமாக வர்ணித்துள்ளார். வர்ணனை முழுவதும் ஸ்ரீநிவாசனின் மகிமைகளை தெரியப்படுத்துகிறது. ஸ்வாமியின் மகிமைகளை தியானித்து ஞானத்தால் அறிந்து கொண்டு பூஜித்தால் அனைத்து நற்பலன்களும் உண்டாகும். ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்ரீகிருஷ்ணரின் மகிமையைப் பற்றி அறிந்து கொண்டு அவரின் திருவடிகளை வணங்கினால் யமனுடைய பயம் கனவில் கூட வராது. எப்பொழுதும் ஸ்ரீகிருஷ்ணரின் திருவடிகளை மறக்காமல் நினைவிற் கொண்டால் பாவங்கள் நீங்கும். சகல சுபங்கள் கிட்டும்.

*"சக்ருஸ்ன்மன: க்ருஷ்ண பதாரவிந்த யோர்னி*
*வேசதம் தத்குண ராகியைரிஹ!"*

வேங்கடாசல மஹாத்மியத்தில் ஸ்ரீநிவாசனின் திருவடிகளை துதித்து – ஸ்வாமி! உம் திருவடிகளை பூஜிப்பவருக்கு நல்ல ஞானத்தை அளிக்க சங்கும், அறியாமையைப் போக்க சக்கரத்தையும், பிரம்ம ராக்ஷசனின் தொல்லைகளை நீக்க கதாயுதத்தையும், சகல சௌபாக்கியத்தை அளிக்க பத்ம ரேகையையும் தரித்து உள்ளீர் என்று கூறப்பட்டு உள்ளது.

*"பாத: ஸாதம் சதானோ தரயது சஹரே*
*ர்யோபலே: காலனேச்சா...."*

பலி சக்கரவர்த்தியை பாதாளத்தில் அழுத்திய பாதம், இந்த பாதத்தின் நகத்தால் திரிபுவனமே புனிதமாகுமாறு கங்காதேவி தோன்றினாள். இளமையான தளிர் போன்ற இவரின் திருவடிகளை நாம் வணங்கினால் நம் மனதில் உள்ள மன வேதனை தூரமாகும். இவ்வாறு ஸ்ரீஹரியின் திருவடிகளைப் பற்றி ஸ்ரீமத்வாசாரியர்கள் முதல் அதன் பின்னர் தோன்றிய அனைத்து பக்தர்களும் துதித்துப் பெருமையாகப் பாடியுள்ளனர்.

*"முக்தா ஆமுக்தாரிந்தர்பனெ கொம்பசரண*
*.... வேங்கட ஸ்ரீநிவாசன சரண..."*

முக்தியைப் பெற பக்தர்களால் அர்ச்சிக்கப் படுபவை இந்த எம்பெருமானின் திருவடிகள், இளமையான ரோஜா மலரின் நிறத்தைக் கொண்டவை. பக்தர்களுக்கு அருளைத் தருபவை, பக்தவத்சலன் என்ற பெயரை உடையவை. உலகு எல்லாம் புகழ் பெற்றவை. எவ்வளவு புகழ்ந்தாலும் மிகையாகாது. பக்தியையும் முக்தியையும் வழங்கு பவை. அழகு மிகுந்தவை. வெண்ணிலாவைப் போன்று ஒளிமிகுந்தவை ஸ்ரீநிவாசரின் திருவடிகள். இத்திருவடிகளை வணங்குவதால் கிடைக்கும் பலன்களோ ஏராளம்.

*"ஈ சரண சமஸ்தரிகெ சுலப சாத்ய... லோசனகெ*
*பாளெவ அப்ராக்ருத சரண"*

அனைவரும் வணங்கி அருளையும் ஞான பக்தியையும் பெறக் கூடியவை. அகங்காரத்தை நீக்குபவை, துன்பங்களை நீக்குபவை. பிரம்மா ருத்ரனையும் காணச் செய்பவை. அனைத்து செல்வங்களையும் அருள்பவை. தைத்யவனக் கூட்டங்களை அழிப்பவை. கண்களால் காண முடிபவை இத்திருவேங்கடவனின் திருவடிகள்.

*"த்வஜ வஜ்ராங்குச பங்கஜ குங்குமாங்கித..."*

கருட பகவானின் முதுகின் மேல் ஏறுபவை, சேஷனின் மேல் நாட்டியம் ஆடுபவை. பக்தியுள்ளவர்களின் மனதில் நிலை நிற்பவை. அனைவராலும் பூஜிக்கப் பெறுபவை. நந்த குலத்தில் திரிந்தவை. த்ரிகுணங்களை உடையவை இந்த கோவிந்தனின் திருவடிகள்.

மேலும், பலிசக்கரவர்த்தியினால் பூமியை தானமாகப் பெற்றவை. போர்க்களத்தில் நாக அஸ்திரத்தில் இருந்து அர்ஜுனனைக் காப்பாற்றி யவை. கம்சனின் வக்ஷஸ்தலத்தை உதைத்தவை. நாரதரால் தம்புராவின் இசையில் ஒலிக்கச் செய்தவை. புகழப் பெற்றவை. அகல்யாவிற்கு சாப விமோசனத்தை அருளச் செய்தவை. அஸ்வத்தாமன் உபயோகித்த அஸ்த்திரத்தில் இருந்து பாண்டவர்களைக் காப்பாற்றியவை.

உரலை இழுத்தவாறு சென்று அர்ஜுன விருக்ஷத்தை வீழ்த்தச் செய்தவை. லக்ஷ்மி தேவியின் இதயத்தில் குடி கொண்டிருப்பவை. கயாசுரனை உதைத்தவை. பூஜிப்பவர்களுக்கு முக்தியை வழங்குபவை. யோகிகளின் மனதிற்கு இன்பத்தைத் தருபவை. வேதங்களால் புகழப் பெறுபவை. பாகவத பக்தர்களுக்கு அருள் புரிபவை. சகல பூகோளம் எல்லாம் மணம் மிக்க மலர்களால் துதிக்கப்படுபவை. இத்தகு புகழ் பெற்றவை திருவேங்கடவனின் திருவடிகள். திருவடிகள் மட்டுமின்றி அவரின் நகங்களும் மிகுந்த பெருமைப் பெற்றவை.

*"பாந்த்வஸ்மாம்ஸ்நச்யகேதோ"* என்று மத்வாசாரியர் நரசிம்மரின் நகங்களை துதித்து பாடியுள்ளார். அவ்வாறே விஜயீந்திர தீர்த்தரும் ஸ்வாமியின் நகங்களை வர்ணித்தார். பலி சக்கரவர்த்தியால் பூமியைப் பெற்றவை. பிரம்மாண்டத்தில் பெரிய விரிசலை ஏற்படுத்தியவை. கண்களுக்கு பலவிதமாகக் காட்சி தருபவை. சிறு பாலகனாக, சிறிய பிள்ளைகளோடு சேர்ந்து கோலி விளையாடுபவை. ஆதியும் அந்தமும் ஆனவை. குரு க்ஷேத்திரத்தில் அர்ஜுனனின் இரதத்தை ஓட்டுபவை. பக்தர்களால் வணங்கத் தக்கவை. கோகுலத்தையும் யமுனா நதிக்கரையையும் புனிதம் செய்தவை. இந்திராதி தேவதைகளின் கிரீடங்கள் போன்று பிரகாசிப்பவை. சகல குணங்களை உடையவை. அசுரர்களின் தொல்லைகளை அடக்குபவை. இத்தகைய புகழைப் பெற்றவை ஸ்ரீநிவாசனின் திருவடி நகங்கள்.

திருவடிகள் எத்தகைய புகழைப் பெற்றனவோ அவ்வாறே அபய ஹஸ்தங்களும் புகழ் பெற்றவை. இந்த அபய ஹஸ்தத்தை ஸ்ரீமத்வாசார்யர் துதித்து வணங்கினார்.

*"சங்கு சக்கர கதா பத்மாதராச் சிந்த்யா...."*

ஸ்ரீவிஜயீந்த்ர தீர்த்தர் ஸ்ரீஹரியின் ஹஸ்தத்தை வர்ணித்துள்ளார்.


திருவேங்கடவனின் அபய ஹஸ்தம் நவரத்தினங்கள் பதிக்கப்பெற்ற தங்க கங்கணத்தைக் கொண்டவை. அர்ஜுனனின் பக்திக்கு யுத்தத்தில் திவ்ய ரதத்தின் மேல் அமர்ந்து குதிரைகளைப் பிடித்துக் கொண்டவை. இளமையான இலைகளைப் போன்றவை. பிரம்மாவிற்கு வேதத்தை போதித்தவை.

ரமணிக்காக பாரிஜாதத்தை கொண்டு வந்தவை. தேவர்களுக்கு அமிர்தத்தை வழங்கியவை. யுத்தத்தில் சூரியனை மறைத்தவை. சந்திரனை காப்பாற்றுபவை. மனக் கமலத்தில் உதிப்பவை. பிரகாசிப்பவை. தானவனின் வயிற்றை பிளந்து குடல்களை உருவி மாலையாக கழுத்தில் அணிந்தவை. தானத்தைப் பெற்றவை. ஹனுமனுக்கு பிரம்ம பட்டத்தை வழங்கியவை. நீயே கதி என்பவருக்கு கைவிடாமல் காப்பாற்றுபவை. மனதார பூஜிப்பவருக்கு தியான நிலையை ஏற்படுத்துபவை. மனிதனுக்கு திருப்தியை வழங்குபவை.

தெலுங்கு மூலம் : திரு. எஸ். நாகராஜாசார்யுலு
தமிழாக்கம் : திரு. வி. வேங்கடரமணா

தொடரும்...

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 67




### இடமிருந்து வலம்

1. பதினோறு திவ்ய தேசங்களின் கருட சேவை நடக்கும் தலம்.....(6)
5. குழந்தை பாக்கியத்திற்காக சந்தான கோபாலன் என்ற கதகளி வழிபாடு செய்யும் தலம்....(5)
9. மகரிஷி மகாபாரதத்தை சொல்ல சொல்ல அதை எழுதி முடித்தவர்....(5)
11. விஷ்ணுவைத் தன் மருமகனாக அடைய வேண்டி தவம் இருந்தவர்....(7)
17. பெருமாளே பிரதானம் என்பதால் தாயார் சன்னதி இல்லாத தலம்....(5)
20. குழந்தை வடிவாக நரசிம்மர் உள்ள தலம்....(9)

### வலமிருந்து இடம்

3. பரசுராமரின் தாய்......(5)
15. பிரம்மனின் லோகம்.....(7)
19. சீனிவாச விமானம், ஹேம விமானம் அமைந்துள்ள திவ்யதேசம்....(8)

### மேலிருந்து கீழ்

2. பஞ்சசார க்ஷேத்திரம் ....(5)
4. உடுப்பியில் உள்ள கருடன் சிலை இங்கிருந்து கொண்டு வரப்பட்டது....(4)
12. நீண்ட ஆயுள் கிடைக்க இந்த கிழமையில் கருட தரிசனம் காண வேண்டும்....(4)

### கீழிருந்து மேல்

6. குருக்ஷேத்திர போரில் அர்ச்சுனன் ஊதிய சங்கு.....(6)
7. சங்கு சக்கரபாணியாக யோக நிலையில் அனுமன் உள்ள தலம்.....(5)
8. நவநரசிம்ம க்ஷேத்திரம்.....(5)
9. பெருமானின் தலைமை சேனாதிபதி.....(7)
10. தேவரிஷி....(4)
13. .....(5)துரோணரை மானசீக குருவாக ஏற்றுக் கொண்டார்
14. வயிற்று வலிக்கு முக்குடி பிரசாதம் படைத்து வழிபடும் தலம்....(8)
16. இராமரின் நினைவாக சீதை அனுமனுக்கு அளித்த ஆபரணம்.....(4)
18. கைகளில் சங்கு, சக்கரம் பதிப்பது.....(6)
21. பாலாறு ஓட்டத்தை திருமால் தடுத்து நிறுத்திய தலம்......(5)

தொகுப்பு :
**திரு. எஸ். ராஜகுமார், சென்னை,**
**81249 30259**

புதிருக்கு விடை அறிய
43ம் பக்கம்
பார்க்கவும்...

## ஸ்ரீராமனின் திருக்கல்யாண குணங்கள் 8

# ஸர்வபூ$_4$தேஷுஹிதன்

**நண்பன் - பகைவன், மனிதன் - விலங்கு என்ற வேறுபாடின்றி அனைவருக்கும் நன்மையே நினைப்பவன்.**



**- திரு. உ.வே. வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி, சென்னை.**

### அரக்கர்களையும் மீட்க நினைத்தவன்

இராம–இராவண யுத்தம் முடிந்தது. ஆகாயத்தில் தேவர்கள் மற்றும் தசரதன் கூடி இராமனைக் கொண்டாடினர். தேவர்களின் இன்னலைப் போக்கிய இராமனுக்கு இந்திரன் கைம்மாறு செய்ய எண்ணினான். இராமன் “தேவேந்திரா! எனக்காகப் போராடி உயிர் துறந்த பல்லாயிரம் குரங்குகளின் உடல்களைப் பாதுகாத்து வைத்திருக்கிறேன். அவர்களது உயிரை மீட்டுத் தர முடியுமா” என்று கேட்டான். இந்திரன் உடனே குரங்குகளுக்கு உயிரளித்தான். மேலும் இராமன் “விபீஷணா! எய்தவனிருக்க அம்பை நொந்து என்ன பயன்! இராவணன் செய்த குற்றத்துக்கு அரக்கர்கள் என்ன செய்வார்கள்? போரில் மாண்ட அரக்கர்களின் உடல்களைக் கொண்டு வா. அவர்களின் உயிரையும் மீட்டுக் கொடுப்போம்” என்றான். ஆனால் அந்தோ! அரக்கர்கள் மாண்டவுடன் இராவணன் அவர்களது உடல்களைக் கடலில் வீசிவிட்டான். ஆகையால் அவர்களது உயிரை மீட்க இயலவில்லை.

தீமை செய்தவர்களையும் பழி தீர்த்தால் சில நிமிடங்களுக்குப் பொய்யான இன்பம் கிட்டலாம். ஆனால் அவர்களுக்கும் நன்மை நினைத்தாலோ அழியாப்புகழ் வந்து சேரும்.

### இராவணனே வந்திருந்தாலும் அழைத்து வா!

இராவணனால் துரத்தப்பட்ட விபீஷணன் கடற்கரையில் வந்து இராமனைத் தஞ்சமாகப் பற்றினான். அவனை ஏற்கக் கூடாது என்று தடுத்த சுக்ரீவனை நீண்ட நேர வாதத்தில் இராமன் சமாதானப்படுத்தினார். விபீஷணனை அழைத்து வரப் புறப்பட்ட சுக்ரீவனிடம் “நாம் பேசிக் கொண்டிருந்த இந்த நேரத்தில் ஒரு வேளை இராவணனே மனம் திருந்தி கடற்கரைக்கு வந்து காத்திருந்தால் திரும்பவும் என்னோடு வாதம் செய்ய வராதே. அவனையும் அன்போடு அழைத்து வா!” என்றான். மனைவியைப் பிரித்த கொடியவனுக்கும் நன்மை நினைக்கும் உள்ளம் யாருக்கு வரும்?

தீயவர்கள் திருந்தாவிடில் உலகுக்குத் தீமை. அவர்களையும் திருத்துவதே அனைவருக்கும் நன்மை.

### பகைவனும் நற்கதி அடைய வேண்டும்

இராவணன் மாண்ட பின் அவனுக்குரிய ஈமச் சடங்குகளைச் செய்யச் சொல்லி விபீஷணனை இராமன் தூண்டினான். தீயவனான அவனைத் தொட்டுச் சடங்கு செய்ய விபீஷணன் மறுத்தான். இராமன், “மரணம் ஏற்படும் வரையில்தான் பகைமை




பார்க்கலாம். மாண்டவனிடம் எதற்கு த்வேஷம்?" இறுதிச் சடங்கினை நீ செய்கிறாயா? அல்லது நான் செய்யட்டுமா?" என்று கேட்டான். இங்கு இராமனின் கருத்தை உற்று நோக்க வேண்டும். உடலில் உயிர் இருந்த வரை இராவணன் இராமனைப் பகைவனாக எண்ணினான். ஆகவே இராமன் அவனுக்கு என்ன நன்மை செய்ய நினைத்தாலும் அதைத் தடுத்தான். இராமன் எப்போதுமே அவனைப் பகைவனாக நினைத்தது இல்லை. திருத்தவே எண்ணினான். இறுதியில் இராமன் சொற்படி விபீஷணன் க்ரியைகளை முடித்தான். பகைவன் மாண்டு போகலாம்; ஆனால் மாண்டவன் பகைவனாக மாட்டான் அல்லவா!

*வளரும்...*

# சொல்லின் செல்வி

சக்தியின் வடிவான உமையவளுக்கு நவராத்திரி விழா, செல்வத்திற்கு அதிபதியான மகாலக்ஷ்மிக்கு தீபாவளி விழா போன்று சொல்லின் செல்வியான கலைமகள் சரஸ்வதி தேவிக்கு உகந்த நாளாக வசந்த பஞ்சமி தினம் திகழ்கிறது. வழக்கமாக தமிழகத்தில் நவராத்திரியின் ஒன்பதாம் நாள் சரஸ்வதி பூஜை என்று கல்விக் கடவுளான சரஸ்வதியை நாம் வணங்குகிறோம். வட இந்தியாவில் வசந்த காலத்தின் துவக்கத்தில் வருகின்ற வசந்த பஞ்சமி நாளை சரஸ்வதி பூஜையாகக் கருதி வழிபடுகின்றனர். இந்நாளில்தான் சரஸ்வதி தேவி அவதரித்ததாக நம்பப்படுகிறது.



வசந்த பஞ்சமிக்குப் பின்னர் தான் கல்வியாண்டின் தேர்வுகளும் தொடங்குவதால் மாணாக்கர்களும் பக்தியோடு சரஸ்வதி தேவிக்கு பூஜை செய்து வழிபடுவர். இந்நாளில் சரஸ்வதி தேவியை வழிபட்டால் அனைத்து கலைகளிலும் முன்னேற்றம் பெறலாம். அதோடு ஆன்மீகத்திலும் உயர்நிலை அடையலாம் என்பது நம்பிக்கை.

கவிச்சக்ரவர்த்தி கம்பரும் "பெரும் திருவுருவும் சயமங்கையுமாகி என்பேதை நெஞ்சில் இருந்தருளும் செஞ்சொல், வஞ்சியைப் போற்றில் எல்லா உயிர்க்கும் பொருந்திய ஞானம் தரும். இன்ப வேதப் பொருளும் தரும் திருந்திய செல்வம் தரும் அழியாப் பெருஞ்சீர்தருமே" என்கிறார். அதாவது இக்கலைமகளை துதித்தால் நிலையான ஞானத்தையும் பேரின்பத்தையும் பற்றக் கூடும். வேதப் பொருளையும் நற்செல்வத்தையும், என்றும் அழியாப் புகழையும் தந்து அருள்புரிவாள் என்கிறார். நாம் இந்நன்னாளில் சொல்லின் செல்வியை தொழுது மேன்மை அடைவோம்.

# திருவேங்கடவன் திருவருள்

திருமதி எம். ராஜகுமாரி, ஆரணி.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கும் திருமலை வாசன் எங்கள் குலதெய்வமாவார். திருவேங்கடவன் என் வாழ்க்கையில் பல அற்புதங்களை நிகழ்த்தி என்னை நெகிழ வைத்துள்ளார். மேலும் பல இக்கட்டான தருணங்களில் என்னை காப்பாற்றியும் இருக்கிறார். அதில் ஒரு சம்பவம் சமீபத்தில் நிகழ்ந்தது.

கடந்த 2019 மே மாதம் என் பேரனின் பிறந்த முடி காணிக்கை செலுத்த திருமலை சென்றோம். நான், என் கணவர், என் மகன், மருமகள், மகள்கள், மருமகன், பேரக்குழந்தைகள் என குடும்பத்துடன் சென்றோம். குழந்தைக்கு முடிகாணிக்கை செலுத்திய பின், திருமலையப்பனின் தரிசனம் கண்டு களித்து சந்தோஷமுடன் வெளியில் வந்தோம். பின்னர் அன்னதானக் கூடம் சென்று அனைவரும் உணவருந்தி விட்டு வெளியில் வந்து ஓய்வெடுக்க அமர்ந்தோம். என் மகனும் மருமகனும் லட்டுப் பிரசாதம் வாங்கி வரச் சென்றனர். என் கணவர் திருக்குளத்தில் நீராடுவதற்கு கிளம்பினார். அவருடன் என் ஒன்பது வயது பேரனும், ஐந்து வயது பேத்தியும் சென்றனர்.

பின்னர் சிறிது நேரம் கழித்து என் பேரன் மட்டும் ஓடி வந்தான். தாத்தாவும், தங்கையும் எங்கே என்று கேட்டதற்கு தங்கை தாத்தாவுடன் வருவதாகக் கூறி ஓடி விட்டாள் என்று கூறினான். பின்னர் சிறிது நேரத்திற்கெல்லாம் என் கணவரும் வந்து சேர்ந்தார். அவரிடம் குழந்தை எங்கே என்று கேட்டதற்கு இரண்டு குழந்தைகளும் சற்று முன்னதாகவே உங்களிடம் வருவதாகக் கூறி விட்டு வந்து விட்டார்களே என்றார். எங்களுக்கு தூக்கி வாரிப் போட்டது பகவானே! இதென்ன சோதனையப்பா? குழந்தையை எங்கே என்று தேடுவது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கூட்டம் அலைமோதுகிறதே. எள் விழுந்தால் எண்ணெய் ஆகும் அளவு மக்கள் வெள்ளம். எங்களுக்கு பதற்றமும் மனத்துயரமும் சொல்லி மாளாது. பகவானே நாங்கள் என்ன தவறிழைத்திருந்தாலும் எங்களை மன்னித்து, எங்கள் குழந்தையை எங்களிடம் கொண்டு வந்து சேர்த்து விடப்பா என்று வேண்டிக்கொண்டு திசைக்கு ஒருவராக குழந்தையைத் தேடிச் சென்றனர்.

லட்டு பிரசாதம் வாங்கி வர சென்ற என் மகனும், மருமகனும் வந்து செய்தியறிந்து குழந்தையைத் தேடச் சென்றனர். என்ன ஆச்சர்யம்! ஐந்தே நிமிடம் தான் இவ்வளவு நடந்தது. குழந்தை பயந்த முகத்துடன் நாங்கள் அமர்ந்திருந்த பக்கமாக பார்த்தபடி வந்து கொண்டிருந்தாள். தேடிச் சென்றவர்களும் திரும்பி வந்து கொண்டிருந்தனர். என் மகள் குழந்தையை சேர்த்து அணைத்துக் கொண்டாள் கண்ணீருடன். ஏழுமலையானின் கருணையை நினைத்து நாங்கள் அனைவரும் திருமலைவாசனுக்கு நன்றி கூறிப் புறப்பட்டு வீடு வந்து சேர்ந்தோம்.





# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

## चतुर्दशः पाठः பாடம்-14

| | | | |
|---|---|---|---|
| शाकम् = காய்கறி(கள்) | प्रथमम् = முதல் | प्रार्थना | करोतु = செய்வாயாக, செய்யட்டும் |
| अनन्तरम्=பிறகு | अनेकधा= பலவிதமாக | | कुरु = செய்யுங்கள் |
| तटाकः = ஏரி | तटाके = ஏரியில் | | करवाणि = செய்வேன், ஆக செய்யட்டும் |

### வினாக்கள்

1. तटाकः अत्रास्ति किम्?
2. तटाके प्रथमं स्नानं कुरु।
3. पाकं अहं करवाणि।
4. अग्रजः शाकानि करोतु!
5. यूयं स्नानं अकुरुत खलु!
6. वयं भोजनमपि अकुर्म।
7. ते इदानीं तटाके स्नानं कुर्वन्ति।
8. बत! ते तटाके न सन्ति।
9. बालकास्तटाके दौष्ट्यं कुर्वन्ति।
10. तथावा, अत्र किञ्चित् एहि।

1. இங்கு ஏரி இருக்கிறதா?
2. ஏரியில் முதலில் குளியல் செய்யுங்கள்.
3. நான் சமையல் செய்வேன்.
4. பெரியவன் காய்கறிகளைச் செய்யட்டும்.
5. நீங்கள் குளியலைச் செய்தீர்கள் அல்லவா!
6. நாங்கள் சாப்பாடு கூட சாப்பிட்டோம்.
7. அவர்கள் இப்போது ஏரியில் குளியல் செய்து கொண்டிருக்கிறார்கள்.
8. ஆஹா! அவர்கள் ஏரியில் இல்லை.
9. சிறுவர்கள் ஏரியில் அட்டகாசம் செய்து கொண்டிருக்கிறார்கள்.
10. அப்படியே சிறிது இங்கு வாருங்கள்.

### விடைகள்

1. நீ அட்டகாசம் செய்ய வேண்டாம்.
2. நான் அட்டகாசம் செய்கிறேனா?
3. அங்கு சிறுவர்கள் அட்டகாசம் செய்து கொண்டிருக்கிறார்கள்.
4. இவர்கள் ஏரியில் குளியல் செய்து கொண்டிருக்கிறார்கள்.
5. முதலில் நான் காய்கறி செய்தேன்.
6. பிறகு அவர்கள் சமையல் செய்தார்கள்.
7. காய்கறிகளை யார் செய்தீர்கள்?
8. சிலர் பிராம்மணர்கள்.
9. அவர்கள் பலவிதமாகச் செய்தார்கள்.
10. நாளை நீயும் அப்படியே செய்ய வேண்டும்.

1. त्वं दौष्ट्यं मा कुरु।
2. किमहं दौष्ट्यं कुर्वन्नस्मि?
3. तत्र बालकाः दौष्ट्यं कुर्वन्ति।
4. एते तटाके स्नानं कुर्वन्ति।
5. प्रथममहं शाकमकरवम्।
6. अनन्तरं ते पाकमकुर्वन्।
7. शाकं कः अकरोत्?(के अकुर्वन्?)
8. केचन ब्राह्मणाः।
9. ते अनेकधा अकुर्वन्।
10. श्वः त्वमपि तथैव कुर्याः।

தெலுங்கு மூலம் : மகாமஹோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி, தொகுப்பு : மகாமஹோபாத்யாய சமுத்ரால லக்ஷ்மணய்யா
தமிழாக்கம் : டாக்டர் கே.கே.ஏ.ரங்கராஜன்

# வாஸ்து சாஸ்திரம்

முனைவர் ஆ.முத்து கிருஷ்ண ஆச்சாரி,
சென்னை,
9444392595

சென்ற இதழின் தொடர்ச்சி...

23அடி பலன் – கெடுதி ஏற்படும். 24 அடி பலன் – வரவும் செலவும் சமம், 25 அடி பலன் – மனைவிக்கு கண்டம், 26 அடி பலன் – உற்சாகமும், உல்லாசமும் நிறைந்த வாழ்க்கை அமையும். போகமும் யோகமும் தேடி வரும். பொருளாதார நிலை செழித்தோங்க பொன்னும் பொருளும் சேரும். 27 அடி பலன் – பொது வாழ்க்கையில் புகழும் செல்வாக்கும் கிட்டும். பலரும் வலிய வந்து உதவி செய்வார்கள். அதிகாரம் செய்யக் கூடிய பதவிகள் தேடி வரும். 28 அடி பலன் – கடவுள் அருள் உண்டு. வேதனைகளும் துன்பங்களும் விலகி ஓடும். இன்பமாக வாழ்க்கை அமைக்க எல்லா முயற்சிகளிலும் எளிதாக வெற்றி கிட்டும். 29 அடி பலன் – பண்ணைத் தொழிலில், பால் வியாபாரம் ஆகியவற்றில் நிறைந்த லாபம் கிட்டும். வாழ்க்கையில் சிறந்த முன்னேற்றங் களைக் காணலாம். மனதில் மகிழ்ச்சி நிறைந்து இருக்கும். 30 அடி பலன் – புத்திர பாக்கியம் தாராளமாக இருக்கும். எதிர்பாராத சொத்து கிட்டும். திடீர் யோகம் உண்டு. பொருளாதார நிலை மிகவும் சிறப்பாக இருக்கும்.

31 அடி பலன் – நல்லவர்கள் நாடி வந்து உதவி செய்வார்கள். தீயவர்கள் விலகி ஓடுவார்கள். பொன்னும் புகழும் கிட்டும். வாழ்க்கையில் உயர்வான நிலை உண்டாகும். காரியசித்தி உண்டு.

32 அடி பலன் – செல்வ அபிவிருத்தி, வெளிநாடு பயணம். 33 அடி பலன் – வாழ்க்கை யின் நிலை உயரும். 34 அடி பலன் – இடமாற்றம் ஏற்படும். 35 அடி பலன் – திருமகள் அருள். 36 அடி பலன் – சுகபோக வாழ்க்கை ஏற்படும். 37 அடி பலன் – செய் தொழில் முன்னேற்றம். 38 அடி பலன் – வறுமை, துன்பம். 39 அடி பலன் – நல்ல வாழ்வு, 40 அடி பலன் – விரோதிகள் வலிமை பெறுவர், 41 அடி பலன் – செல்வம் பெருகும், 42 அடி பலன் – அஷ்டலக்ஷ்மி வாசம்.

43 அடி பலன் – நன்மை ஏற்படாது, 44 அடி பலன் – பெரிய இழப்பு உண்டாகும், 45 அடி பலன் – மக்கள் செல்வம் அதிகரிக்கும். 46 அடி பலன் – வறுமை, நோய், 47 அடி பலன் – பொருள் இழப்பு, 48 அடி பலன் – தீயினால் ஆபத்து, 49 அடி பலன் – தவறுகள், இழப்புகள். 50 அடி பலன் – நன்மை உண்டாகாது, 51 அடி பலன் – வீண்



**அலுவலக அறை – வடமேற்கு திசை, புத்தக அறை – தென்மேற்கு திசை, சமையல் அறை – தென் கிழக்கு திசை, உணவு புசிக்கும் அறை – தெற்கு திசை, படுக்கை அறை – மேற்கு, வடகிழக்கு திசைகள், பூஜை அறை – மேற்கு, வடகிழக்கு திசைகள், குளியல் அறை – கிழக்கு திசை, சேமிப்பு அறை – வடக்கு திசை, கழிவறை – வடமேற்கு திசை. வாஸ்து முறையுடன் அமைந்த வீட்டில் அமைதியும், அன்பும், செல்வமும் பொங்கி வழியும்.**

**இங்கு முக்கியமான மூலைகளான ஈசான மூலை, அக்னி மூலை, குபேர மூலை, நிருதி ஆகிய மூலைகளில் இருக்கவேண்டிய, இருக்கக் கூடாத பொருட்களைப் பற்றி பார்ப்போம். எப்போதும் வீட்டின் நடுவே நின்று திசைக்காட்டியின் உதவியோடு திசைகளை அறிந்துக்கொள்ளுங்கள். வீட்டின் முதன்மை வாசல் கதவு வழியாகத்தான் நேர்மறை சக்தி வீட்டிற்குள் நுழையும். ஆகவே வீட்டின் வாசற்கதவு தென்மேற்கு திசையை நோக்கி இருக்காதபடி பார்த்துக் கொள்ளுங்கள். ஏனென்றால் இந்த திசை தான் தீய சக்திகளின் நுழைவுவாயில்.**

**அது நமக்கு கஷ்டங்களையும் துரதிஷ்டத்தையும் தரும். ஏற்கனவே வீட்டின் கதவு இந்த திசையில் இருந்தால், இரண்டு அனுமன் கடவுளின் படம் இருக்கும் டைல்ஸ் கல்லை வாசலுக்கு வெளியில் பதிக்கலாம். கோயில் அல்லது பீடம் தான் அனைத்து வாஸ்து சாஸ்திரங்களுக்கும் சக்கரவர்த்தி அதனால் பூஜை அறையை வடகிழக்கு திசையில் அமைத்திடுங்கள். அனைத்து நன்மைகளும் வந்து சேரும். வணங்கும் போது கிழக்கு திசையை நோக்கி வணங்க வேண்டும்.**



# வீட்டின் பகுதிகள்

தொல்லைகள், 52 அடி பலன் – பொருள் அபி விருத்தி, 53 அடி பலன் – பெண்களால் பொருள் நட்டம், 54 அடி பலன் – அரசின் சீற்றம், 55 அடி பலன் – உறவினர் விரோதம், 56 அடி பலன் – குடும்ப விருத்தி, 57 அடி பலன் – சந்ததி நாசம், 58 அடி பலன் – கண்டம் ஏற்படும், 59 அடி பலன் – கவலைகள், வறுமை, 60 அடி பலன் – செய்தொழில் அபிவிருத்தி.

பொதுவாக, வீடு கட்டும் தாய், தந்தை, மூத்த சகோதரர், ஆசிரியர், மூத்த உறவினர்கள் வாழும் பகுதிக்கு வடக்கு திசையிலும், கிழக்கு திசையிலும் தான் மனை வாங்க வேண்டும் என்பது சாஸ்திரம் கூறும் கருத்தாகும்.

### அக்னி மூலை :

அக்னி மூலை – தென்கிழக்கு மூலை. இங்கு சமையற்கூடம் இருக்க வேண்டும். பெண்களின் மனம், உடல் நலத்தின் மீது ஆதிக்கம் செலுத்தும் மூலை ஆதலால் பழுதில்லாமல் அமைக்க வேண்டும். வீட்டின் பிரதான அக்னி மூலையில் சமையற் கூடம் அமைக்க இயலா விடினும் சமையற்கட்டின் அக்னி மூலையில் அடுப்பு (மண்ணெண்ணை எரிவாயு போன்றவை) இருக்கும் படி பார்த்துக் கொள்ளவும். விதி விலக்காக வாயு (வடமேற்கு) மூலையில் சமையற் கூடமும், அடுப்பும் அமைக்கலாம். அக்னி மூலையில் குடிநீர், நிலைப் பேழை, கழிப்பறை குளியலறை இருக்கக்கூடாது.

வீட்டின் பிரதான அக்னி மூலையில் கிணறு, கழிவறை, குளியலறை, கழிவுத்தொட்டி (செப்டிக் டேங்க்) துணி துவைக்கும் கல் போன்றவைகள் இருக்கக்கூடாது. வீட்டின் அக்னி மூலையில் மின் சாதனங்களை வைக்கலாம். சமையலறை என்பது வளமையை குறிக்கும் இடமாகும். அதனால் இந்த இடம் தென்கிழக்கு திசையில் இருக்க வேண்டும்.

வடகிழக்கு திசையில் சமையலறை அமைந்தால், வீட்டில் பணம் மற்றும் உடல்நலப் பிரச்சனைகள் ஏற்படும். ஒரு வேளை வடகிழக்கு திசையில் இது இருந்தால் மூன்று வெண்கல பாத்திரத்தை தலை கீழாக உட்கூரையில் தொங்க விடுங்கள். ஆனால் அது அடுப்பை நோக்கி தொங்கக்கூடாது.

**குபேர (வடக்கு) மூலை :**


செல்வம் தங்கவும், பண விருத்திக்கும் குபேர (வடக்கு) மூலை.

**நிருதி (தென்மேற்கு) மூலை :**

நிருதி (தென்மேற்கு) மூலையில் பணப்பெட்டி, நிலைப்பேழை வைக்கவும். சுவற்றில் பணப் பெட்டியை பதிப்பதாயின் நிருதியில் பதிக்கவும். வீதியைப் பார்த்துத்தான் வாயிற்படியை அமைக்க முடியும். எனவே, தெற்கு மேற்கு வாயிற்படிகள் தவிர்க்க முடியாதவைகளே. தெற்கு மேற்கு திசையில் தலைவாயில் அமைக்கும்படி நேரினும், ஈசான மூலை, அக்னி மூலையை சரியாக அமைத்துக் கொண்டால் போதும். தெற்கு மேற்கு தலைவாயில் அமைந்த வீட்டின் கொல்லைப் புறமாக ஈசான அக்னி மூலைகள் அமைவதை கவனிக்கவும்.

**வாயு மூலை :**


கழிவறை, குளியல் அறைகளை வடமேற்கு மூலையில் அமைக்கவும். சில இடங்களில் விதிவிலக்காக இந்திரன் மூலையில் கழிவறை அமைக்கலாம். குளியலறை மற்றும் கழிவறையில் நரகத்தின் சக்தி இருப்பதால் இந்த அறை வடமேற்கு அல்லது கிழக்கு திசையில் இருக்க வேண்டும். வடக்கு அல்லது வட கிழக்கு திசையில் இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் வீட்டில் பணம், உடல்நிலை மற்றும் கல்வியில் பிரச்சனை இருக்கும்.




நிருதியில் (தென் மேற்கில்) படுக்கையறையில் கழிவறையும் வேண்டின் அந்த அறையின் தென்மேற்கு மூலையில் அமைக்கவும். முதன்மை படுக்கை அறைதான் உறுதிப்பாடு என்ற கதவுக்கு சாவி. அது தென்மேற்கு திசையில் இருக்க வேண்டும். மேலும் தூங்கும் போது தலை தெற்கு அல்லது மேற்கு திசை நோக்கி இருக்க வேண்டும். ஆனால் கண்டிப்பாக வடகிழக்கு திசையில் தூங்கக் கூடாது. படுக்கை அறையில் தையல் இயந்திரம் வைத்து இருந்தால் கணவன் மனைவி இடையே அடிக்கடி சண்டை வரும். தண்ணீர் அல்லது நீருற்றின் படங்களை படுக்கையறையில் மாட்டக் கூடாது. இது உங்களை வெகுவாக பாதிப்புக்கு உள்ளாக்கும்.


**மையப் பகுதி :**

வீட்டின் மையப் பகுதி வீட்டின் மூக்கைப் போன்றது. இங்கே தான் நம் வீடு மூச்சு விடுகிறது. அது திறந்த வெளியாகவும் குப்பையாகவும் இருக்கக் கூடாது. இங்கே சுவரிருந்தால் வயிற்று பிரச்சனை மற்றும் பணப் பிரச்சனை வரக்கூடும். அதனால் ஒரு சிறிய நீலநிற பல்பை 24 மணி நேரமும் எரிய விடுவது நல்லது.வீட்டில் எந்த திசையிலாவது வெட்டு அல்லது வளைவுகள் இருந்தால் அது வீட்டை பாதிக்கும். முக்கியமாக தென்மேற்கு, வடக்கு, வடகிழக்கு, தென்கிழக்கு திசைகளில் இருந்தால், பெரிய பிரச்சனைகள் ஏற்படும். இதன் பின்னணியில் பல ரகசியங்கள் அடங்கியிருக்கிறது.




மிகவும் அடர்த்தியான வண்ணங்களை கொண்டு சுவற்றில் வர்ணங்களை பூசக் கூடாது. முக்கியமாக சிவப்பு மற்றும் செந்நீலம் நிறங்கள். இது நோயை உண்டாக்கும் சக்தியை தூண்டும். போன்சாய் மரங்களை வீட்டினுள் வளர்க்காதீர்கள். அது நீங்கள் இருக்கும் துறையில் வளர்ச்சிக்கு தடை போடும்.வீட்டு தரையை வாரம் இரண்டு முறை, உப்பு உள்ள தண்ணீரால் துடைத்தால் வீட்டில் இருக்கும் எதிர்மறையான சக்திகள் ஓடியே போகும். வாக்குவாதங்கள் வீட்டை ஆக்கிரமித்து இருக்கிறதா? அப்படியானால் நல்ல பாடல்களை தினமும் நான்கு அல்லது ஐந்து முறை ஒலிக்க விட்டால், வீட்டில் அமைதி நிலவும்.

தொடரும்...


திருப்பதி
ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி
தெப்போத்ஸவம்
10-02-2022
முதல்
16-02-2022
வரை

# பன்னிரு ஆதித்யர்கள்




**தாத - சித்திரை**

தாதா சுபஸ்ய மே தாதா
பூயோ பூயோஉபி பூயஸ:



**அர்யமன் - வைகாசி**

அர்யமா து ஸதா பூத்யை
பூயஸ்யை ப்ரணதஸ்ய மே



**மித்ரன் - ஆனி**

மித்ரோஉஸ்து மம மோதாய
தமஸ்தோமவிநாசன:



**த்வஷ்டன் - ஐப்பசி**

த்வஷ்டா சுபாய மே பூயாத்
சிஷ்டாவளிநிஷேவித:



**விஷ்ணு - கார்த்திகை**

காயத்ரீப்ரதிபாத்யம் தம் விஷ்ணும்
பக்த்யா நமாம்யஹம்



**அம்சு மந்தன் - மார்கழி**

முநீந்த்ரனிவஹஸ்துத்யோ
பூதிதோ உம்சுர்பவேண்மம





# பன்னிரு ஆதித்யர்கள்



**வருணன் - ஆடி**

வருணோ தவளோ ஜிஷ்னு:
புருஷோ நிம்னகாதிப:



**இந்திரன் - ஆவணி**

சகஸ்ரரஸ்மி ஸம்வீதம்
இந்த்ரம் வரதமாச்ரயே



**விவஸ்வந்தன் - புரட்டாசி**

நபோக்ரஹ மஹாதீபம்
விவஸ்வந்தம் நமாம்யஹம்



**பஹூன் - தை**

கடிகாணாம் சய: கர்தா
பகோ பாக்யப்ரதோஉஸ்துமே



**பூஷன் - மாசி**

பூஷா தோஷாய மே பூ யாத்
ஸர்வபாபாபநோதனாத்



**பர்ஜன்யன் - பங்குனி**

ஜகதானந்தஜனக: பர்ஜன்ய:
பூஜ்யதே மயா



02-12-2021 அன்று திருமலையில் வசந்த மண்டபத்தில்
ஆகமப்படி நடைபெற்ற தன்வந்திரி பூஜை



19-12-2021 அன்று திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமிக்கு
ஏகாந்தமாக நடைபெற்ற தெப்போத்ஸவத் திருக்காட்சி





11-12-2021 அன்று திருப்பதி அலிபிரி அருகிலுள்ள ஸப்த கோ பிரதக்ஷிண சாலைக்கு வருகை புரிந்த காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீஸ்ரீஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளுடன் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள், தி.தி.தே. கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு. ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள் மற்றும் பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர்கள்



16-12-2021 அன்று திருப்பதி ஸ்ரீபத்மாவதி சிறார் இருதய மருத்துவமனையில் நவீன இருதய கேத் ஆய்வகத்தை துவக்கி வைத்த தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத் தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள்



31-12-2021 அன்று 3டி அனிமேஷன் நாட்காட்டியை வெளியிட்ட தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள், செயலாட்சித் தலைவர் டாக்டர் கே.எஸ்.ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ். அவர்கள், தி.தி.தே. கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு. ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ்.அவர்கள், திருப்பதி இணைச் செயலாட்சித்தலைவர் திரு. வீரபிரஹ்மம் ஐ.ஏ.எஸ். அவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள்

# நாம நீராஜனம்

– திருமதி ராஜலக்ஷ்மி, கேரளா.
9946128102

"சுபம் யாத்ரா" குழுவினர், சுமார் ஒரு நூறு பக்தர்களுடன் வடதேச யாத்திரை நடத்தினர். பல தலங்களுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்தனர். இப்போது அவர்கள் குருக்ஷேத்திர இடத்தில் இறங்கினர். அங்கே நடக்கும் உரையாடலை நம் கவனத்திற்கு...

கமலா : சேகர் இந்த குருக்ஷேத்திர மைதானத்தில் தான் பாண்டவ கௌரவ போர் நடந்தது அல்லவா?

சேகர் : ஆமாம், தர்மம் வெற்றி பெற்ற இடம். "கீதை மற்றும் சஹஸ்ரநாமம்" பிறந்த புனித இடம்.

எல்லோரும் அங்குள்ள தீர்த்தத்தில் ப்ரோக்ஷித்து, அங்குள்ள கோயிலில் வழிபட்டு ஒரு பரந்து விரிந்த இடத்தில் மாலை வேளையில் மனம் ஆனந்தமாக அமர்ந்தார்கள். இந்த இடத்தில் இப்போது நாம் எல்லோரும் "விஷ்ணு சஹஸ்ரநாமத்தை ஜபிக்கலாமே" என்றான் கணபதி. எல்லோரும் ஒப்புக் கொண்டனர். அப்போது ராம் கேள்வி எழுப்பினான். இந்த விஷ்ணு சஹஸ்ரநாமாவை எல்லோரும் தினமும் கூறுகிறார்கள். இதை யார் எழுதினார். அதனுடைய சிறப்பை கூறுங்களேன்?

கமலா : "என்ன இப்படி கேட்ட? மகாபாரதத்தில் "அனுஷாசன பர்வம்" என்ற பகுதியில் வேதவியாசரால் எழுதப்பட்டது. ஆனால் இதை கூறியவர் "பீஷ்ம பிதாமகர்".

அங்கே இருந்த குட்டி வள்ளி கேட்டாள். "பீஷ்மர் தாத்தாவா?" எனக்கு அவர் ரொம்ப பிடிக்கும். அவர் மிகப் பெரிய வீரன்.

கணபதி : அது மட்டுமின்றி அவர் தன் வாழ்நாளில் பிரம்மச்சர்ய விரதத்தை கடைபிடித்தவர். இவருடைய முதல் பெயர் தேவவ்ரதன். சந்தனு மஹாராஜா சத்யவதியை மணப்பதற்காக இந்த கடும் ப்ரதிக்ஞையை ஏற்றார்.



ராம் : மிக மிக அருமை, மற்றவருக்காகவே தன் வாழ்நாளை அர்ப்பணம் செய்தவர் போல் இருக்கே!.

உமா : "ஆமாம், அதனால் தான் அவர் வேண்டும் நேரம் மரணம் நெருங்கும் என்று வரத்தை அவர் தந்தை அளித்தார்"

குட்டி கார்த்திக் அங்கிருக்கும் பீஷ்மரின் அம்பு படுக்கை வரைந்த படத்தை பார்த்து அதிர்ந்து போனான். "இது என்ன மாமா? இவர், உடல் முழுவதும் இரத்தம் சொட்டச் சொட்ட அம்புகளால் ஆன படுக்கையில் இருக்கிறார்?". அதற்கு கணபதி "நாம் இருக்கும் இந்த இடத்தில் மிகப் பெரிய போர் நடந்தது, அப்போரில் சிகண்டி என்ற பெண் பீஷ்மரை முதலில் தாக்கினாள் என்று கூறினார். உடனே வள்ளி ஒரு பெண் போர்க்களத்திலா? என்றாள். உடனே உமா, அவள் பெயர் அம்பை. முற்பிறவியில் பீஷ்மரை கொல்வதாக சபதம் மேற்கொண்டாள். ஏனெனில் அவள் விரும்பிய மணாளனை அவளால் அடைய முடிய வில்லை என்றாள்.

ராம் : அதற்கு பீஷ்மர் காரணமா?

கணபதி : அவர் தம்பிக்காக ஸ்வயம்வரத்திலிருந்து அம்பையை கூட்டி வந்தார். அது அவளுக்குப் பிடிக்கவில்லை. மறுபிறவியில் பிறந்து போரில் பங்கேற்று பீஷ்மரை வீழச் செய்தாள். ஒரு பெண்ணுடன் போர் புரிய மாட்டேன் என்று ஆயுதங்களை துரந்தார் பீஷ்மர். உடனே அர்ஜுனனின் அம்புகளாலும் தாக்கப்பட்டு வீழ்ந்தார்.

உமா : அவர் அத்தனை அம்புகள் பட்டும் உயிர் நீக்க உத்தராயண புண்ணிய காலம் வரை காத்துக் கொண்டிருந்தார்.

கார்த்திக் : எனக்கு வருத்தமாக இருக்கிறது. பின் எப்படி சஹஸ்ர நாமம் கூறினார்.

சேகர் : போர் முடிந்த பிறகு யுதிஷ்டிரருக்கு ஆறு கேள்விகள் பிறந்தன.

1) யார் உலகத்தில் பெரிய தெய்வம்?

2) யாரை சரணடைய வேண்டும்?

3) யாரை வணங்கினால் மங்களம் உண்டாகும்?

4) தங்களுக்கு தெரிந்த தர்மத்தில் தலை சிறந்த தர்மம் யாது?


5) யார் கடவுளுக்குள் தலைவர்?

6) யாரை வணங்கினால் சம்ஸாரம் என்னும் கடலை தாண்ட முடியும்?

கண்ணனிடம் கேட்ட யுதிஷ்டருக்கு, கண்ணன் "வா யுதிஷ்ட்ரா, உனக்கு பிதாமகர் இந்த கேள்விக்கு பதில் அளிப்பார்" என்று கூட்டிச் சென்றார். அங்கு பீஷ்மரோ, இரத்தம் சொட்ட வலியில் துடித்தார். கண்ணன் தன் கரம் கொண்டு பீஷ்மரைத் தொட, அவர் வலி எல்லாம் மறைந்து விட்டன. யுதிஷ்டரின் கேள்விக்கான பதில் தான் "விஷ்ணு சஹஸ்ரநாமம்". எப்படி கங்கை நம் பாவம் போக்குகிறதோ, அதே போல் கங்கையின் மைந்தனான பீஷ்மரின் "விஷ்ணு சஹஸ்ர நாமம்" நம் பாவங்களைப் போக்கும்!

உமா : இந்த ஆறு கேள்விகள் பலவிதமாக வர்ணித்தாலும் இதற்கு ஒரு பதில்தான். பகவான் "ஸ்ரீமந் நாராயணன்" ஆவார். இந்த உலகத்திற்கு ஆதாரமாகவும், இந்த உலகத்திற்கு தர்மமாகவும் "தர்மஸ்ய ப்ரபு அச்சுத:" நாம சங்கீர்த்தனமே இந்த கலிகாலத்தில் உள்ள அனைத்து கஷ்டங்களைப் போக்கும் மருந்தாகும். ஏனெனில் *"மருத்துவனாய் நின்ற மாமணி வண்ணா"*, *"செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே"* என்ற ஆழ்வாரின் கூற்றாகவும், முழுமுதற் கடவுளாக "ஸ்ரீமந் நாராயணனே பரமாத்மா" ஆவார் என்று கூறி, அந்த பகவானுக்கு எத்தனையோ நாமங்கள் இருந்தாலும் அதில் சில ஆயிரத்தை இந்த சம்சாரிகளுக்காக கோர்த்து எளிதில் விஷ்ணு வனமாலையாகப் பொழிந்தார்.

சேகர் : மிக மிக அருமை, பகவத் கீதையை விட விஷ்ணு சஹஸ்ர நாமம் உத்தமமானது. ஏனெனில் இது பரம பாகவதனான பீஷ்மர் கூற, பகவான் கண்ணன் கேட்டதால், நம் போன்ற சாதாரண மக்களுக்கு பாகவதர்கள் தான் வழிகாட்டி. கீதை புரிவதற்கு சிரமம், ஆனால் விஷ்ணு சஹஸ்ர நாமமோ, மிக மிக இனிது, எளிமையானது. கீதை மரம் என்றால், விஷ்ணு சஹஸ்ர நாமம் பழமாகும்.



பழத்தை தின்றால் நாம் நற்கதி அடைவோம்.

உமா : பகவானை விட, பகவானின் நாமம் சாலச் சிறந்தது. கஜேந்திரன், பிரகலாதன், துருவன், பாஞ்சாலி போன்ற பக்தர்களை காப்பாற்றியது நாமம் தான். தேவரிஷி நாரதர், நாம் எப்போதும் பகவானின் நாமங்களை கூறிக் கொண்டே இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறாரே!

ரமா: "அஜாமிளன்" என்ற ஒரு பிராமணன் தன் வாழ்நாளில் நல்லதைவிட்டு, தீய குணங்களை கடைபிடித்து, உயிர் பிரியும் வேளையில், "நாராயணா" என்று தன் மகனின் பெயரை கூப்பிட்டான். உடனே அவனுக்கு "விஷ்ணு தூதர்கள்" தோன்ற, நல்ல போதனைகளை அவன் கேட்டு, மனம் வருந்தி, இந்த ஒரு தடவை அறியாமல் சொன்ன நாமமே இவ்வளவு நல்லதை தரும் என்றால், நான் வாழ்நாளில் எத்தனையோ நாட்கள் நாமாக்களை கூறி நற்கதி அடைந்து இருக்கலாமே என வருந்தினான். அதனால் தான் ஆழ்வார் கூற்றின்படி *"நமன் தமர் தலைகள் மீதே!"* மற்றும் *"நரகமே சுவர்க்கமாகும் நாமங்கள் உடைய நம்பி"* என்று கண்ணனின் நாம வைபவத்தைக் கூறுகிறார்.

வள்ளி : எனக்கு *"சாந்தாகாரம் புஜக சயனம்"* ரொம்ப பிடிக்கும்.

கணபதி : மிக அழகான சுலோகம். வேதத்தில் உள்ள கருத்தை சுருக்கி சொன்ன சுலோகம். பரமாத்மா "ஸ்ரீமந் நாராயணன்" என்று காண்பிக்கும் சுலோகம்.

ரமா : *"சுக்லாம்பரதரம்"* என்று தொடங்கி, பல பேர் அர்ஜுனன், பகவான் கண்ணன், வியாசர், பார்வதி தேவி, பரமேஸ்வரன், சஞ்ஜயன் என்று பலர் "உவாச" கூறுகிறார்கள்" என்று சுலோகங்கள் அமைக்கப்பட்டன.

கணபதி: மஹா விஷ்ணுவின் எண்ணற்ற அவதாரங்களும் அவனுடைய நித்ய கல்யாண குணங்கள், அவனுடைய சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ் போன்றவை பிரகாசமாகக் கூறுகிறது. அதை தவிர எளிமையான திருநாமங்களையும் கூறுகிறது.

உமா : பார்வதி தேவி பரமசிவனாரிடம் எப்படி எளிமையாக விஷ்ணு சஹஸ்ர நாமத்தை கூறலாம் என்று வினவினார். அதற்கு சிவபெருமான் *"ஸ்ரீராம ராம ராமேதி ரமே ராமே மனோரமே! சஹஸ்ர நாம தத்துல்யம் ராமநாம வரானனே!".* "தாரக மந்திரமான ராம நாமம்" ஒன்றே எல்லா துயரத்தையும் போக்க வல்லது என்றார்.

வள்ளி : *"வனமாலி கதீ சார்ங்கி"* என்ற சுலோகம் பகவானுடைய ஆயுதங்கள் மற்றும் அலங்காரத்தை கூறுகிறது. மிக எளிமையாகப் புரிந்து கொள்ள முடிகிறது அல்லவா? கண்ணனே நாராயணன் என்பதையும் கூறியுள்ளார்.

சேகர் : கடைசியில் சஞ்சயன் கூறியது மிக அருமை. *"யத்ரபோகே"* "எங்கு கண்ண

**பிழை திருத்தம்**

ஜனவரி 2022 பக்கம் எண்.31 ல் கட்டுரை ஆசிரியர் பெயர் கீர்த்திமூர்த்தி உ.வே. ஏ.டி.கே. ஸ்வாமி என்பதற்கு பதிலாக டி.ஏ.கே. ஸ்வாமி (உ.வே. திருப்பதி அனந்தான் பிள்ளை கிருஷ்ணமாசாரிய ஸ்வாமி) என்று திருத்தி வாசிக்கவும்.

னும் பார்த்தனும் உள்ளனரோ அங்கு ஜெயம் ஏற்படும்” என்று கூறினார்.

கீதா : *“காயேன வாசா”* என்ற சுலோகம் எல்லா வித தவறுகளையும் மன்னிக்கும்படி பகவானிடம் பிரார்த்தனை செய்வது, எல்லாம் *“நாராயணாயேதி ஸமர்ப்பயாமி”, “ஸர்வம் கிருஷ்ணார்ப்பணம்”* என்று கூற வேண்டும் என்று வலியுறுத்துகிறார் வியாசர்.

கார்த்திக்: எனக்கு இன்னும் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல் தோன்றியுள்ளது.

லட்சுமி : நல்லது, விஷ்ணு சஹஸ்ர நாமத்திற்கு பல வித்வான்கள், ஆசார்யர்கள் வியாக்யானம் செய்திருக்கிறார்கள். அதை குருவிடம் கேட்டு பயன் பெறுவாயாக.

சேகர் : சங்கராசார்யார், மத்வாசாரியார், பராசர பட்டர் போன்ற பல ஆசாரியர்களும் மிக விரிவாக விளக்கமும் அளித்து உள்ளனர்.


வள்ளி : இதை நாம் எப்போது சொல்ல வேண்டும். எப்படி சொல்ல வேண்டும்.

கணபதி : பொதுவாக, தினமும் காலையில் அல்லது மாலையில் சொல்வது வழக்கம்.

ஆனால், நமக்கு எப்பொழுதெல்லாம் தோன்றுகிறதோ அப்பொழுதெல்லாம் பகவானின் நாமங்களை கூறுவதில் தவறில்லை. மந்திரத்தைத் தவிர திருநாமத்திற்கு எந்தவித நியமும் கிடையாது.

சிலர் வியாதியால் படுத்திருக்கும்போது, சிலர் பயணம் செய்யும் போது, சிலர் வீட்டில் ஏதாவது நல்ல காரியம் நடந்தால் கூட்டுப் பிரார்த்தனையாக சொல்வது, சிலர் மன அமைதிக்காக, சிலர் பயம் போக்குவதற்காக என்று எந்த விதத்திலும் பகவான் நாமாவை ஜபிப்பது நல்ல பழக்கம்.

வைணவ ஆசார்யர்கள் பகவானின் நாமாவை எப்போதும் உச்சரித்து கொண்டிருப்பார்கள். அவர்கள் எதை வேண்டியும் ஜபிக்க மாட்டார்கள். நாமாவை உச்சரிப்பதாலேயே ஆனந்தம் அடைகிறோம் என்று கூறுவார்கள். நாமும் நமக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் “கோவிந்தனை” ஜபிப்போம். அவன் நம்மை காத்திடுவான்.



# மங்கள சுலோகங்கள்

*ராம லக்ஷ்மண ஸீதாஸ்ச ஸுக்ரீவோ*
*ஹநுமாந் கபிஹி ।*
*பஞ்சைதான் ஸ்மரதோ நித்யம்*
*மஹாபாதா ப்ரமுச்யதே ॥*

**இராமர், லக்ஷ்மணர், சீதை, சுக்ரீவன், ஹனுமார் ஆகிய இவ்வைவரையும் நாள்தோறும் நினைத்தால் பெரும் தொல்லை அகலுகின்றது.**

# சூரிய நமஸ்காரமும் யோகாசனங்களும்

## - ஓர் பார்வை

**யோக சாஸ்திரம்**

– டாக்டர் கி.ஜ. நிகிலா வெங்கட் ,கோயம்பத்தூர்,
8940991234

*சென்ற இதழின் தொடர்ச்சி...*



**சூரிய நமஸ்காரம் ஆசனங்கள் வரிசையில் பார்க்கலாம்.**

1. தாடாசனம், 2. ஊர்த்வ ஹஸ்தாசனம், 3. பாத ஹஸ்தாசனம், 4. அஸ்வசஞ்சலநாசனம், 5. பர்வதாசனம், 6. அஷ்டாங்க நமஸ்காராசனம் 7. புஜங்காசனம், 8. பர்வதாசனம், 9. அஸ்வ சஞ்சலநாசனம், 10. பாத ஹஸ்தாசனம், 11. ஊர்த்வ ஹஸ்தாசனம், 12. தாடாசனம்.

பீஜ மந்திரம் மற்றும் சூரிய நமஸ்காரத்தின் ஆசனர்களுடன் சக்ரா தொடர்பு:

**சூரிய நமஸ்காரம்-சக்ரம்-பீஜ மந்திரம்- சுவாசிக்கும் முறை**

1. தாடாசனம்–அனாஹதா – ஓம் ஹ்ராம் – மூச்சு வெளியே விடுதல்
2. ஊர்த்வ ஹஸ்தாசனம்–விஷுத்த– ஓம் ஹ்ரிம்–மூச்சு உள் இழுத்தல்
3. பாத ஹஸ்தாசனம்–ஸ்வாதிஷ்டானா–ஓம் ஹ்ரும்–மூச்சு வெளியே விடுதல்
4. அஸ்வசஞ்சலநாசனம்– ஆக்ஞா–ஓம் ஹ்ரீம்–மூச்சு உள் இழுத்தல்
5. பர்வதாசனம் – விஷுத்தி– ஓம் ஹ்ரௌம்– மூச்சு வெளியே விடுதல்
6. அஷ்டாங்க நமஸ்காராசனம்– மணிபூரக– ஓம் ஹ்ரா–இடை நீக்கம்
7. புஜங்காசனம்–ஸ்வாதிஷ்டானா–ஓம் ஹ்ராம்–உள் இழுக்கவும்
8. பர்வதாசனம்–விஷுத்தி–ஓம் ஹ்ரிம்–மூச்சு வெளியிடவும்
9. அஸ்வ சஞ்சலநாசனம்–ஆக்ஞா–ஓம் ஹ்ராம்–மூச்சு உள் இழுக்கவும்
10. பாத ஹஸ்தாசனம்–ஸ்வாதிஷ்டானா–ஓம் ஹ்ரைம்–மூச்சு வெளியே விடவும்.
11. ஊர்த்வ ஹஸ்தாசனம்–விஷுத்த– ஓம் ஹ்ராம்–மூச்சு உள் இழுக்கவும்
12. தாடாசனம்–அனாஹத– ஓம் ஹ்ரா–மூச்சு வெளியே விடவும்.

**யோகா மற்றும் மெட்** (MET : Metabolic Equivalent of Task)

மெட்–என்பது வளர்சிதை மாற்றத்தை குறிப்பிடும் அளவீடு. இது உடற்பயிற்சியின் ஆற்றல் செலவை அளவிட பயன்படும் அலகு ஆகும்.

3மெட்கள் குறைவான இலகுவான உடற்பயிற்சி யாகக் கருதப்படுகின்றன.

3– 6 மெட் – கள் மிதமான உடற்பயிற்சி மற்றும் 6 அல்லது அதற்கு மேற்பட்டவை தீவிரமான உடற்பயிற்சி.

**வாசகர்களே...**

**ஏழு மலைகள் நிறைந்த திருமலையில் நித்திய வாசம் செய்யும் கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடவன் தங்களுடைய வாழ்வில் நிகழ்த்திய திருவிளையாடல்கள் அதாவது ஸ்வாமியின் திருலீலைகளை ஸப்தகிரி பத்திரிகையில் வெளியிடுவதற்கு ஏதுவாக அதை எழுதி ஸப்தகிரி அலுவலகத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.**


*எங்கள் முகவரி :*

**பிரதான ஆசிரியர்,**
**"ஸப்தகிரி", தி.தி.தே.,**
**கபிலத்தீர்த்தம் சாலை, திருப்பதி - 517 507.**
**0877- 2264543, 2264359.**


சூரிய நமஸ்காரத்தின் ஆற்றல் செலவு 2.9 மெட் (ஒளி) முதல் 7.4 மெட் (வீரியம்) வரை இருக்கும்.

சரியான முறையில் சூரிய நமஸ்காரம் செய்தால் அதிக ஆற்றல் பெறலாம்.

**உலக சாதனை :**

2019 ஆம் ஆண்டில் மலையேற்றம் செய்யும் ஒரு குழு டார்ஜிலிங் மலை உச்சியில் 18,600 அடி உயரத்தில் நின்று சூரிய நமஸ்காரம் செய்து உலக சாதனை படைத்துள்ளனர்.

**ஆயுர்வேதம் - சூரிய நமஸ்காரம் :**

தோஷங்கள் மற்றும் திசுக்களில் சூரிய நமஸ்காரத்தின் விளைவு:

- சூரிய நமஸ்காரத்தின் வரிசையில் பல நிலைகளில் ஈடுபட்டுள்ளதால், அவை மூன்று தோஷங்களையும் கூட்டாக சமப்படுத்த உதவுகின்றன.
- இதேபோல் பெரும்பாலான திசுக்கள் இந்த நடைமுறைகளால் சீரான இரத்தோட்டத்தையும் ஆரோக்கியத்தையும் பெறுகிறது.
- முக்கியமாக இது தசைகள், எலும்புகள் மற்றும் மூட்டுகளை உயர்த்த உதவுகிறது. சூரிய நமஸ்காரத்தினால் உடலின் பெரும்பாலான சேனல்களுக்கும் உறுப்புகளுக்கும் நன்மை கிடைக்கிறது.
- இது ஒழுங்காகவும் சரியாகவும் செய்யப் படும்போது நல்ல உடற்பயிற்சியை அளிக் கிறது மற்றும் முழு உடலையும் மனதையும் ஆரோக்கியமாக வைத்திருக்கிறது.

*முற்றும்...*

## வடுக நம்பி இயற்றிய ஸ்ரீயதிராஜ வைபவம்



*குதோபநீதிஸ்து ததஸ்ஸ்வபித்ரா ஸமப்$_4$யஸந்*
*வேத$_3$தத$_3$ங்க$_3$சாஸ்த்ரம் ।*
*ராமாநுஜார்யோப$_4$வத$_3$க்$_3$ர்யதேஜா*
*மஹர்த்$_3$தி$_4$ராநந்தி$_3$தஸத்யசீல: ॥*
(10)

**தமது தந்தையாலே உபநயனம் செய்விக்கப்பெற்ற ஸ்ரீராமாநுஜரும், வேத வேதாங்க சாஸ்த்ரங்களைக் கற்கின்றவராய், சிறந்த ப்ரஹ்மதேஜஸ்ஸையும், மிகுந்த பெருமைகளையும், இன்புறும் நல்லொழுக்கங்களையும் உடையவராக இருந்தார்.**



**– "ஸுதர்சனம்" ஆசிரியர் இயற்றியது**

### புராண வரலாறு :

ஹாரித மஹரிஷி இங்கு தபஸ் செய்து அபாரமான ஞானம் வரப்பெற்று, பற்பல நூல்களை இங்கு படைத்தார் என்றும், அவற்றின் தொகுப்பு "ஹாரித ஸம்ஹிதை" என்றும், ஹாரித மஹரிஷிக்கு தரிசனம் கொடுத்த இவ்வூர் எம்பெருமான், அவர் வேண்டுகோளை ஏற்று, "ஹாரித ஹம்ஹிதை" என்கிற திருமொழிகள் தோன்றிய இடம் ஆதலால் இவ்வூர் "திருமொழிக்களம்" என்றும், ஹாரிதருக்குக் காட்சி கொடுத்ததால் "திருமொழிக்களத்தான்" என்றும், "ஹாரித ஸம்ஹிதை" யில் சொல்லியபடி, இப்பூமியில் வாழ்வோர் முக்தி அடைவர் என்றும் அருளியதாகச் சொல்வர்.

இராமபட்டாபிஷேகம் ஆகி, இராமன் இந்த தேசத்தை அயோத்தியில் இருந்து அரசாண்டபோது, நாட்டின் நிலையை அறிந்து வருமாறு பரதனுக்கும், லக்ஷ்மணனுக்கும் கட்டளை இட்டதாகவும், அக்கட்டளைப்படி எங்கெங்கோ அலைந்து, இந்த ஊருக்கு வந்த லக்ஷ்மணன், ஹாரிதரைப் பார்த்து, அவரை வணங்கி, "தங்களுக்குக் குறை ஏதும் உள்ளதா?" என்று கேட்டதாகவும், அதற்கு மஹரிஷி "உன் குறையையே நீ அறியவில்லையே" என்று சொன்னதாகவும், லக்ஷ்மணன் முனிவர் மூலமாக, "இராமனைத் திரும்பவும் அயோத்திக்கு அழைத்துச் செல்ல பரதன் வந்தபோது, பரதன் தவறான எண்ணத்தோடு வந்திருக்கிறான் என்று பரதனையே கொல்லத் துணிந்ததையும், அதற்கு இதுவரை பரதனிடம் பிழை பொறுக்க வேண்டாததையும்" அறிந்து, அப்போது அவ்விடம் வந்த "பரதனிடம்" முனிவரை முன்னிறுத்தி, தன் தவறை லக்ஷ்மணன், அண்ணன் பரதனிடம் சொல்லி மன்னிக்க வேண்டியதாகவும், பரதன்–லக்ஷ்மணனின் இராம பக்தியைப் புகழ்ந்தானே தவிர, இதைக் குற்றமாகவே எண்ணவில்லையென்றும், இங்ஙனம் பரத லக்ஷ்மண– இனிய கலந்துரையாடல்கள் நடந்த இடமாதலால் "திருமொழிக்களம்" ஆனதாகவும் கூறுவர்.

### சிறப்புகள் :

ஆசார்ய ஹ்ருதயம், இந்த எம்பெருமானை "மிக மென்மையான குணம்" நிறைந்தவராக புகழ்கிறது. திருவண்பரிசாரத்தில் உடலின் மென்மை. இங்கு குணத்தின் மென்மை.

| | | |
|---|---|---|
| பெருமாள் | : | திருமூழிக்களத்தான், ஸ்ரீஸூக்திநாதன், அப்பன், (கிழக்கு நோக்கிய நின்ற திருக்கோலம்). |
| தாயார் | : | மதுரவேணி நாச்சியார் (தனி சந்நிதி இல்லை) |
| விமானம் | : | ஸௌந்தர்ய விமானம் |
| தீர்த்தம் | : | சங்க தீர்த்தம், ஸூக்தி தீர்த்தம், சிற்றாறு, பெருங்களம் |
| ப்ரத்யக்ஷம் | : | ஹாரிதமஹரிஷி, தேவ ரிஷிகள் |

# திருமூழிக்களம்

108 திவ்யதேச வைபவம்

63



– உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

ஆகமம் : நம்பூதிரிகளின் பூஜாக்ரமம்
மங்களாசாஸனம் : ஸ்ரீநம்மாழ்வார், திருமங்கை ஆழ்வார்.

**விசேஷம்:**

பகவானின் அர்ச்சாவதார நிலை. அவருடைய குணங்கள் எல்லாவற்றையும் விளங்குமாறு காட்டும் விளக்காக உள்ளதாக பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்.

**த்யானச்லோகம்**

*ய: ஸ்ரீ ஸூக்திஸ்தலமிதி மஹத்க்ஷேத்ரவர்யேச தத்வாந்,*
*தேவோ தேவ்யா மதுரகசயா ஸூந்த ராஸ்யே விமாநே ।*
*ப்ராசீ வக்த்ரோ ஹரவிதி முகைஸ் ஸேவ்யதேசத்தடாக,*
*ப்ராந்தே பாதிச் ரிதஜன, மநோநந்தந: ஸர்வதாஸ: ॥*

**பாசுரம்**

*“ஒழிவின்றித் திருமூழிக்களத்துறையும் ஒண்சுடரை,*
*ஒழிவில்லா அணிமழலைக் கிளிமொழியாள் அலற்றியசொல்*
*வழுவில்லா வண்குருகூர்ச்சடகோபன் வாய்ந்துரைத்த*
*அழிவில்லா ஆயிரத்து இப்பத்தும் நோய் அறுக்குமே”*

– நம்மாழ்வார்

*“பொன்னானாய்! பொழில் ஏழும் காவல் பூண்ட*
*புகழ் ஆனாய்! இகழ்வாய தொண்டனேன் நான்*
*என் ஆனாய்! என் ஆனாய்! என்னல் அல்லால்*
*என்னறிவன் ஏழையேன்? உலகமேத்தும்*
*தென்னானாய்! வடவானாய்! குடபாலானாய்!*
*குணபாலமதயானாய் இமையோர்க்கு என்றும்*
*முன்னானாய்! பின்னானார் வணங்கும் சோதி!*
*திருமூழிக் களத்தானாய் முதலானாயே!”*

– திருமங்கை ஆழ்வார்

*“காண்கின்ற ஐம்பூதங்கட்கும் இருசுடர்க்கும்*
*சேண்கலந்த இந்திரற்கும் தேவர்க்கும்- மாண்கரிய*
*பாழிக்களத்தாற்கும் பங்கயத்து நான்முகற்கும்*
*மூழிக்களத்தான் முதல்”*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.

**நாமாக்கள்**


*591. ஓம் ஸாந்தி: நம:*
பரம சாந்த நிலையில் எல்லா அதிகாரங்களையும் தன்னுள் உள்ளவனே
*ஓம் அத்யாத்மவித்யாயை நம:*
ஆத்மஞானத்தை அளிப்பவளே

*592. ஓம் பராயண: நம:*
மோக்ஷத்துக்கு வேண்டிய பக்தியை அளிப்பவனே
*ஓம் க்ருதாகமாயை நம:*
தங்களை பூஜிக்கும் முறைகளை சொல்லும் ஆகம சாஸ்த்ரங்களை அருளியவளே

*593. ஓம் சுபாங்க: நம:*
யோக அங்கங்களான யம நியமாதிகளை உடையவனே
*ஓம் ஆப்யாயின்யை நம:*
அடைய வேண்டிய திவ்ய தம்பதிகளை தம்மை அடைவிக்கும் உபாயமாக இருப்பவளே

*594. ஓம் சாந்தித: நம:*
ஸாயுஜ்யமென்கிற சாந்தி நிலையைத் தருபவனே
*ஓம் கலாதீதாயை நம:*
சாஸ்த்ரங்களால் அறிந்து கொள்வதற்கும் அப்பாற்பட்டவளே

*595. ஓம் ஸ்ரஷ்டா: நம:*
பலவிதச்ருஷ்டிகளைச் செய்பவனே
*ஓம் ஸுமித்ராயை நம:*
சரணாகதியை, வேறு ஒருவர் சிபாரிசு இன்றி, நினைத்தவுடன் தம்மிடம் செய்வதற்கும் சுலபமாக இருப்பவளே





596. ஓம் குமுத: நம:
பூலோக ஜனங்களுக்குச் சுகமளித்து மகிழ்விப்பவனே
ஓம் பரபக்திதாயை நம:
பக்தர்களின் பக்தியை ப்ரேமத்தை வளர்த்து தங்களை தரிசித்துக் கொண்டிருக்கும் நிலையான தியானத்துக்குப் பலம் ஊட்டுபவளே

597. ஓர் குவலேசாய நம:
ஜீவர்களின் உள்ளே புகுந்து நடத்துபவனே
ஓம் காங்க்ஷ மாணாயை நம:
பக்தர்கள் தங்களை அடைய வேண்டும் என்று விரும்புமவளே.

598. ஓம் கோஹித: நம:
பூமிக்கு நன்மை செய்பவனே
ஓம் மஹாமாயாயை நம:
நித்யசம்சாரிகள் ப்ரம்மானந்தம் பெற உலக சுகம் முதல், த்வய ஜப பலன் வரை கொடுத்து ரக்ஷிக்கும் மிக ஆச்சர்ய சேஷ்டிதங்களை உடையவளே

599. ஓம் கோபதீ: நம:
சொர்க்கத்திற்கும் பதியே
ஓம் கோலகாமாயை நம:
வராஹப் பெருமானிடம் மிகுந்த ஆசையுள்ளவளே

600. ஓம் கோப்த நம:
கர்ம பலன்கள் அனைத்தையும் காப்பவனே
ஓம் அமராவத்யை நம:
ஆஸ்திக்ய முதலிய தெய்வீகக் குணங்கள் உடையவர்களை ரக்ஷிப்பவளே
ஸ்ரீமதே மதுரவேணீ நாயிகா ஸமேத
ஸ்ரீஸூக்திநாத பரப்ரஹ்மணே நம:

**குறிப்பு :**

எர்ணாகுளத்திலிருந்து பேருந்து வசதி உள்ளது. ஆலப்புழையில் இருந்து சுமார் 24 கி.மீ. தொலைவு “பராதப்புழா” ஆற்றங்கரையில் கோயில் அமைந்துள்ளது.


திவ்ய தேச வைபவம் வளரும்...

## தியான சுலோகங்கள்

மத் பாவநா: மத்ய ஜநா:
மத் பக்தா: மத் பராயணா: |
மம பூஜா பரா ச்சைவ
மயி யாந்தி லயம் நரா: ||

என்னையே நினைத்தும், என் பெயரையே பாராயணம் செய்தும் தூய்மையான மனதுடன் நினைப்பவனை காப்பாற்றுகிறேன் (பகவான் கண்ணன்).

தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.



தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி,
சென்னை, 9841884972

## திருக்கண்ணமங்கையாண்டான் வாழித்திருநாமம்...

திருக்கண்ணமங்கையாண்டான் என்னும் ஆசார்யர் பத்தாம் நூற்றாண்டில் ஆனி மாதம் திருவோணம் நக்ஷத்ரத்தில் தமிழ் நாட்டில் கொடைவாசல் அருகிலுள்ள திருக்கண்ண மங்கை என்னும் திவ்ய தேசத்தில் அவதரித்தவர். ஸ்ரீக்ருஷ்ண லக்ஷ்மிநாதாசார்யர் என்ற இயற்பெயர் கொண்ட இவ்வாசாரியர், ஸ்ரீமந்நாதமுனிகளின் தேக ஸம்பந்தம் பெற்றவராய், அவருடைய எட்டு சீடர்களில் ஒருவருமாவார்.

*அன்புடனே நாதமுனி அடிபணிந்தோன் வாழியே*
*ஆனிதனில் திருவோணத்தில் அவதரித்தான் வாழியே*
*இன்பமுடன் கண்ணமங்கை வந்துதித்தான் வாழியே*
*எழிலுடனே நாதனாக ஆட்சி செய்தான் வாழியே*
*துன்பமென தன்முயற்சி நீத்த செல்வன் வாழியே*
*தூமணிவண்ணன் தாள்கதி என்றான் வாழியே*
*அன்பால் உலகாரியனார் போற்ற நின்றான் வாழியே*
*அழகாரும் திருக்கண்ணமங்கையாண்டான் வாழியே*

**பதவுரை :**

அன்புடனே–அன்போடு, நாதமுனி–ஸ்ரீமந்நாத முனிகளின், அடிபணிந்தோன்–திருவடிகளைப் பற்றினவர், வாழியே–வாழவேண்டும். ஆனிதனில்–ஆனிமாதத்தில், திருவோணத்தில்–திருவோண நக்ஷத்திரத்தில், அவதரித்தான்–தோன்றியவர். இன்பமுடன்–மகிழ்ச்சியுடன், திருக்கண்ண மங்கை–திருக்கண்ணமங்கை என்னும் திவ்ய தேசத்தில், வந்துஉதித்தான்–வந்து தோன்றியவர். எழிலுடனே–அழகுடனே, நாதனாக–தலைவராக, ஆட்சி செய்தான்–கைங்கர்யம் செய்தவர். துன்பமென– இந்தப்பிறவித் துன்பம் என்று, தன்முயற்சி–தான் முயல்வதை, நீத்த–விட்ட, செல்வன்–சிறப்புடையவர். தூமணிவண்ணன்–தூய மணி போன்ற பெருமாள், தாள்–திருவடி, கதி–புகல், என்றான்–என்று இருந்தவர். அன்பால்–அன்புடனே, உலகாரியனார்–பிள்ளை





லோகாசார்யரால், போற்ற நின்றான்–புகழும்படி இருந்தவர். அழகாரும்–அழகு நிறைந்த திருக் கண்ண மங்கையாண்டான், வாழியே– பல்லாண்டு வாழவேண்டும்.

**சிறப்புரை**

*(அன்புடனே நாதமுனி அடிபணிந்தோம்)*
ஸ்ரீமந்நாதமுனிகளின் சீடர்களில் ஒருவர் திருக்கண்ணமங்கையாண்டான் ஆவர். சீடருக்கு உரிய குண நிறைவை உடையவர். தம் ஆசார்யரிடம் அன்பு கொண்டதால், அவ்வாசிரியரும் இவருக்கு துவய மந்திர உபதேசம் செய்தார். மேலும் திருவாய்மொழி முதலான திவ்ய பிரபந்தங்களை கற்பித்தார். திருவாய்மொழியில் ஐந்தாம் பத்தில் "பொலிக பொலிக" என்ற பதிகத்தை உபதேசிக்கும் போது ஸ்ரீமந்நாதமுனிகள் ஆழ்வார் தமக்குக் கனவில் அருளிய திவ்யஸூக்திகளையும் தாம் கண்ட கனவு பற்றியும் அருளினார். உடனே திருக்கண்ணமங்கையாண்டானும் "கனவில் வ்யக்தியை நேராகக் கண்டதேவரீரோடே ஸம்பந்தம் உள்ள அடியேனுக்கு ஒரு குறைகளும் இல்லை" என்று பெருமிதமடைந்தார். ஸ்ரீமந்நாத முனிகள் சம்பந்தத்தால் வேதாந்தங்கள் அனைத்தும் கற்ற திருமழிசையாழ்வாரைப் போல குற்றமற்றவர். வேதார்த்தங்களை நிர்ணயிப்பதிலும் பேச்சு வன்மையிலும் பிரஹஸ்பதியைப் போன்றவர். பிரகலாதனைப் போல பக்தி மிகுந்தவர். நாதமுனிகள் போல எம்பெருமானுடைய திருநாமங்களை ஸங்கீர்த் தனம் செய்பவர். உபய வேதாந்த ஸாரத்தை அறிந்தவர். இதுபற்றியே "அன்புடனே நாதமுனி அடி பணிந்தவன்" என்றது காண்க.



*(ஆனிதனில் திருவோணத்தில் அவதரித் தான்)* ஆனி–வடமொழியில் ஜ்யேஷ்ட மாதம் எனப்படும். திருவோணம்–விஷ்ணு நக்ஷத்திரம். இத்திருவோணம்தான் நக்ஷத்ர பெருமையில் மீன், ஆமை, வராகம் ஆகிய அவதாரங்களைச் செய்த விஷ்ணுவானவர் ஐப்பசி மாதம் அவதரித்ததாக பாஞ்சராத்ர ஆகமம் கூறும். இப்படிபட்ட பெருமை கொண்ட திருவோணத்தில் ஆனி மாதம் கிருஷ்ண பக்ஷத்தில் அவதரித்தவர் திருக்கண்ண மங்கை யாண்டான் ஆவார். இவர் பராத்ரர் என்ற நித்ய ஸூரியின் அம்சமாவார்.

*(இன்பமுடன் கண்ணமங்கை வந்துதித் தான்)* ஆழ்வார்களால் பாடப்பெற்ற 108 திவ்ய தேசங்களில் சோழநாட்டு திருப்பதியில் ஒன்றானது திருக்கண்ணமங்கை என்னும் திவ்ய தேசமாகும். திருமங்கையாழ்வாரால் இன்பம் பயக்க 14 பாசுரங் களால் பாடப்பெற்ற திருத்தலமாகும். கண்ண மங்கைக்கு "கழுநீர் மலரும் வயல்" (பெரி.திரு.7–10–6) என்றும், "களிவண்டறையும் பொழில்" (பெரி.திரு.7–10–7) என்றும், "கருநெல் சூழ்" (பெரி.திரு.10–1–1) என்றும், "கன்னமதில் சூழ்" (பெரி.மடல் 116) என்றும் திருமங்கையாழ்வாரால் பாடப்பெற்றது.மேலும், அங்கு நின்ற கோலத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை, "பெரும்புறக்கடலை", "அடலேற் றினை" ,"இன்சுவைக் கரும்பினை" என்று பலபடியாக பெரியதிருமொழி ஏழாம் பத்து, பத்தாம் பதிகத்தில் 97 திருநாமங்களைக் கொண்டு ஆழ்வார் அழைக்கும் அழகு, இன்பம் பயப்பதாகுவதுப்பற்றி "இன்பமுடன் கண்ணமங்கை" என்றபடி. இத்தகைய திருத்தலத்தில் உதித்தவர் ஆண்டான் ஆவார். உதித்தலாவது– சூரியன் உதிக்கும் போது ஒளி அமைந்தது போல ஆண்டானும் அந்தணர் தலைவராக அவதரித்து தந்தையால் உபநயனம் செய்விக்கப்பெற்று ஒரு விஜாய மாத்ரத்தினால் ஆசார்யருடைய திருமுகத்தில் இருந்து எல்லா வேதங்களையும் அத்யயனம் செய்தவ ராவார். இதுவன்றோ உதித்ததின் பெருமை.

வாழித்திருநாமம் வளரும்...



# ஸ்ரீமத் பகவத்கீதை

தெலுங்கு மூலம் : திரு.கே. விஸ்வநாத சாஸ்திரி
தமிழாக்கம் : டாக்டர் சி. கோவிந்தசாமி


பீமனின் பெயரைச் சொல்லாமல் துரியோதனன் சாத்யகி என்ற பெயரைக் கூறுவதின் மூலமாக என்ன சொல்ல வருகிறார்? அதாவது போர் தொடங்குவதற்கு முன்பு துரியோதனனும் அர்ச்சுனனும் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவிடம் சென்றார்கள். அப்பொழுது அவ்விருவரும் நடைபெறப்போகும் யுத்தத்தில் தங்களுக்கு உதவும்படி விண்ணப்பித்துக் கொண்டார்கள்.

அர்ச்சுனன் பரமாத்மாவை தன் பக்கத்தில் இருக்கும்படி கேட்டுக் கொண்டான். துரியோதனன் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் யாதவ படைகள் அனைத்தையும் தன் பக்கம் இருக்கும்படி கேட்டுப் பெற்றுக் கொண்டான்.


- தவறாமல் கோவிட் நிபந்தனைகளை கடைப்பிடித்தல் வேண்டும்.
- முகக்கவசம் தவறாமல் அணிந்திருத்தல் வேண்டும்.
- பயன்படுத்திய முகக்கவசங்களை அதற்குரிய குப்பைத் தொட்டியில் போடவும்.
- சானிடைசர் தவறாமல் உபயோகித்தல் வேண்டும்.
- இடைவிடாமல் 20 நிமிடத்திற்கு ஒருமுறை கைகளை கழுவுதல் வேண்டும்.
- கூட்டமாக எங்கும் இருத்தல் கூடாது.
- சமூக இடைவெளியை கடைபிடித்தல் வேண்டும்.
- தவறாமல் இரண்டு தவணை தடுப்பூசிகளை போட்டுக்கொள்ள வேண்டும்.

நோய் தொற்று தடுப்பு முறைகள்



**திருமலை தரிசனத்திற்கு வரும் முன்...**



▶▶ **திருமலை தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் தவறாமல் இரண்டு (2) தவணை கோவிட் தடுப்பூசி செலுத்தி கொண்டதற்கான சான்றிதழ் கொண்டு வருதல் வேண்டும்.**

**அல்லது**

▶▶ **48 மணி நேரத்திற்கு முன்னர் ஆர்.டி.பி.சி.ஆர் கொரோனா பரிசோதனையை செய்து, கொரோனா தொற்று இல்லை என்பதற்கான சான்றிதழை கொண்டு வருதல் வேண்டும்.**



அதன்படி ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா தன் யாதவ சேனைகள் அனைத்தும் துரியோதனனின் பக்கம் நின்று போர் செய்யும் படி ஆணையிட்டார். ஆனால் அவர்க ளில் சாத்யகி மட்டும், "நான் அதர்மத்தின் பக்கம் இருக்க மாட்டேன். பாண்டவர்கள் பக்கமே இருப்பேன் என்று கூறி, ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் ஆணைக்குச் செவிசாய்க்க மறுத்து விட்டான். மேலும், அவன் செய்த சபதத்திற்கு ஏற்றவாறே யுத்த களத்திற்கும் வந்தான். ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவின் யாதவ சேனைகள் அனைத்தும் கௌரவர்கள் பக்கம் சென்று நிற்க, சாத்யகி ஒருவன் மட்டும் பாண்டவர்கள் பக்கம் நின்றான். இது துரியோதனனுக்கும் சாத்யகிக்கும் இடையே இருந்த வேறுபாட்டைக் காட்டுகிறது.

இப்படியாக முதலில் "சாத்யகி" பெயரைக் குறிப்பிட்டவன், இரண்டாவதாக விராடன் பெயரைக் குறிப்பிட்டுக் கூறுகிறான். விராடன் நமக்கு எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்த பெயர்தான். விராடன் ஒரு சாதாரண வீரன்தான். இருந்தும், அவன் துரியோதனனுக்குச் செய்யக் கூடாத மிகப் பெரும் அபகாரம் செய்தான். தலைமறைவாக வாழ்ந்து வந்த பாண்டவர்களுக்கு அவர்கள் மறைந்து வாழ்வதற்காக இடம் கொடுத்து உதவினான். அவன் அவ்வாறு செய்யாமல் இருந்திருந்தால் நான் அவர்களை எப்படியாவது கண்டு பிடித்துவிட்டிருப்பேன்.

எனக்கு அந்த வாய்ப்பு கை நழுவி போவதற்குக் காரணமாக இருந்தவன் இந்த துரோகியான விராடராஜன் என்பது துரியோதனனின் எண்ணம். பாண்டவர்கள் அவர்களுடைய திறமையால் தலைமறைவு வாழ்க்கையைப் பூர்த்தி செய்ய வில்லை. விராடன் என்ற துரோகி அந்த யானைகளைப் போன்ற பாண்டவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தான்.

தொடரும்...

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 67க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | நா | ங் | கூ | ர் | | ம் | | | ம் | 2 தி |
| வி | தே | கா | ணு | 3 ரே | ன | | த | | | க | ரு |
| ர் | | ம் | 4 அ | | 5 சே | ர் | த் | த | லா | க் | ச் |
| க | | ல | யோ | வா | க் | ர் | த | ன் | | ணி | சே |
| ங் | | பி | த் | ன | வ | த | வ | வ | | மா | றை |
| ளி | ம் | கோ | தி | ர | ஷ் | ர | 6 தே | லை | | ல் | |
| 7 சோ | ன | 8 அ | ணி | மு | 9 வி | 10 நா | ய | க | ர் | ட | |
| 11 மே | தா | 12 வி | ம | க | ரி | ஷி | | 13 ஏ | | 14 கூ | கா |
| | ரா | யா | டா | ம் | க | லோ | ய | தி | த் | 15 ச | ஃ |
| | த் | ழ | 16 சூ | | 17 கு | ண | சீ | ல | ம் | | வெ |
| | 18 மு | ன் | ல் | யி | கோ | ர் | யா | சி | ச் | 19 நா | ரு |
| 20 தி | ரு | நா | ரா | ய | ண | பு | ர | ம் | | | 21 தி |

அலசுவோம்......

அறிவோம்....

ஆதிகாவிய நாயகர்களை...



# சுக்ராச்சாரியார் தேவயானி கசன்

திரு. சத்யதாரா,
சென்னை,
9894526302.

மகாபாரதம் என்ற மாபெரும் சமுத்திரத்தில் .... ஆங்காங்கே நிரந்தரமாக ஒளிவீசும் முத்துக் குவியல்கள் ஏராளமாகக் குவிந்து கிடக்கின்றன. மகான் வேதவியாசர் மஹாபாரதம் சொல்லும் முன் பகுதியிலேயே ..... துவக்கத்தில் காணப்படும் சந்தனு மஹாராஜனுக்கு முன் உள்ள வம்சாவளி பற்றியும், அதன் தொடர்பான திவ்ய சரித்திரங்கள் பற்றியும், மிக அழகாக பொழிந்து இருக்கிறார். அபார தவ வலிமை வாய்ந்த பல ரிஷிகள், தேவர்கள், அரக்கர் முதலான பலரும் கொண்டிருந்த பறிமாற்றங்கள்.... இந்த இதிஹாஸ காவியத்தின் அழகினை அனைவரும் அனுபவித்து மகிழுமாறு தூக்கி நிறுத்துகின்றன. அதில் சுவையான கதாபாத்திரங் களான சுக்ராச்சாரியார், கசன், தேவயானி ஆகியோரின் சாகசங்களோடு பின்னப்பட்டுள்ள அற்புத படைப்பினை ஸப்தகிரி வாசகர்களுடன் பகிர்ந்து மகிழ்கிறோம்.

மஹாவிஷ்ணு கொண்ட நரசிம்ம அவதாரத்தில், பெருமாளால் சம்ஹாரம் செய்யப்பட்ட, இரண்யகசிபுவின் மகன் பக்த பிரகலாதன், பிரகலாதனின் மகன் வீரோசனன், வீரோசனனின் மகன் மகாபலி (திருமால், தனது வாமனாவதாரத்தில், மூன்றடி மண் யாசகம் கேட்டது இந்த மன்னனிடம்தான்). சுக்ராச்சாரியார், வாமனாவதாரம் நிகழ்ந்த காலத்திலேயே, மகாபலி சக்கரவர்த்தியின் குருவாக இருந்ததை காண்கிறோம்.

யுகங்கள் தோறும், தேவர்களுக்கும் அரக்கர்களுக்கும் நிகழ்ந்த போர்களில், இறைவனின் லீலா விநோதங்கள் பல.... அனுபவித்து அனுபவித்து ஆனந்தம் கொள்ளச் செய்யும். நாம் அலசவிருப்பது, துவாபரயுகத்தில், மஹாபாரத வரலாறு உருக்கொள்ளும்முன் காணப்படும் விந்தையான நிகழ்வுகள்.

தேவர்களின் குரு பிரஹஸ்பதி, அசுரர்களின் குரு சுக்ராச்சாரியார். அம்ருத சஞ்சீவினி என்பது ஒப்பற்ற வலிமை வாய்ந்த மஹாமந்திரம். மரணம் அடைந்த யாவரும் இந்த மஹாமந்திர பிரயோகத்தினால் மீண்டும் உயிர் கொண்டெழுவார்கள். இதனைக்காட்டிலும் வேறென்ன உயர்ந்த பெருமை இருக்கக்கூடும். அம்ருத சஞ்சீவினி என்ற அற்புதமான மந்திரத்தை அறிந்து வைத்திருந்த நிலையில் இறந்துபோன அரக்கர்கள் கூட்டத்தினை மீண்டும் உயிர் பெறச்செய்து , அரக்கர்கள் எப்போதும் வெற்றிக் கொண்டு, தேவர்கள் விழுந்த வண்ணமிருந்தனர்.

ஆனால், இந்த மஹாமந்திரம் அசுரர் குருவின் வசமே இருந்தது. தேவர்கள் ஒன்றுகூடி ஆலோசனை செய்தனர். இப்படிபட்ட ஒரு அபூர்வமான மந்திர பிரயோகம் தங்கள் வசம் இல்லாது போயிற்றே ...! இதனை நாமும் பெறமுடியாதா? என்று சிந்தித்தனர். சுக்ராச்சாரியாரிடம் சென்று எப்படியாவது அந்த

# கண்ணன் கருத்துரை



*பரித்ராணாய ஸாதூனாம் விநாசாய ச துஷ்க்ருதாம்।*
*தர்ம ஸம்ஸ்தாப னார்தாய ஸம்பவாமி யுகே யுகே ॥*

(4-8)

**நல்லோரைப் பொல்லாரிடமிருந்து காப்பதற்கும், கொடியோரை அடியோடு அழிப்பதற்கும் தருமத்தை மீண்டும் உறுதியாக நிலை நிறுத்துவதற்கும் யுகந்தோறும் நான் அவதரிக்கிறேன்.**



தொகுப்பு : பேராசிரியர் அமரர் பொன் சௌரிராஜன், திருப்பதி.

மந்திரத்தினை அறிந்து வந்துவிட்டால் அரக்கர்களிடமிருந்து மீண்டு வெற்றிக் கொள்ளலாம். குரு சுக்ராச்சாரியாரிடம் யார் செல்வது? தேவர்களிடமிருந்து வந்த ஒருவருக்கு அசுரகுரு மந்திரத்தை உபதேசிப்பாரா? என்றெல்லாம் குழம்பிய நிலையில்.... பின் அனைவரும் ஒன்று கூடி ஒரு முடிவுக்கு வந்தனர்.

மிகுந்த அழகு கொண்டவனும், நல்ல குணங்கள் ஒருங்கே அமையப் பெற்று உயர்ந்த பண்புடன் விளங்கியவனும் தங்களது குரு பிரகஸ்பதியின் குமாரன் கசனை சுக்ராச்சாரியாரிடம் அனுப்புவது என்று முடிவு செய்து, தங்களது குருவான பிரகஸ்பதியின் அனுமதியை வேண்டினர். பிரகஸ்பதியும் அமிர்த சஞ்சீவினி மந்திரம் கிடைக்கப் பெற்றால் சரி என்று, தனது மகனை அனுப்பி வைக்க அனுமதி அளித்தார். தேவர்கள் அனைவரும் கசனை அழைத்து, தங்களது தேவையையும் முடிவையும் விளக்கினர். எந்த வழியிலாவது குரு சுக்ராச்சாரியாரின் முழு அன்பையும் அனுகிரகத்தையும் நீ பெற்று விட வேண்டும். உன் அழகும் அடக்கமும் இதற்காகவே பயன்படுத்த வேண்டும். சுக்ராச்சாரியாரின் மகளான தேவயானியின் அன்பையும் முழுதாகப் பெற்றுவிட்டால் ஏதாவது ஒரு கட்டத்தில் சுக்ராச்சாரியாரிடமிருந்து அமிர்தசஞ்சீவினி மஹாமந்திரத்தை பெற்றுவிடலாம் என்று பல உபாயங்களைக் கூறினார்கள்.

கசன் சுக்ராச்சாரியாரிடம் வந்து சேர்ந்து, குருவை நமஸ்கரித்து தன்னை அறிமுகம் செய்து கொண்டான். மகரிஷி ஆங்கிரஸர் எனது பிதாமகர், அவருடைய புத்திரரான தேவகுரு பிரகஸ்பதி எனது பிதா என்று அடக்கமாக பிரார்த்தித்து நின்றான். அவனது அடக்கத்தைக் கண்டு அகமகிழ்ந்தார் சுக்ராச்சாரியார், அவனுக்கு ஆசிகள் அளிக்க விருப்பம் கொண்டு என்ன வேண்டும் கேள் என்றார். நான் தங்களது சிஷ்யனாக இருக்க பேராவல் கொண்டுள்ளேன், தங்களுக்குரிய அனைத்து பணிவிடைகளையும் செய்ய காத்திருக்கிறேன். அன்புடன் என்னை ஏற்று தங்களது சிஷ்யனாக அங்கீகரிக்க வேண்டும் என்று வணங்கி நின்றான்.

நல்ல அடக்கமும், ஆச்சாரமும், பணிவும் கொண்ட ஒரு பிரம்மச்சாரி இளைஞன், கற்றறிந்த குரு ஒருவரிடம் இவ்வாறு வேண்டினால், அவனை நிராகரித்தல் கூடாது என்பதும் குருமார்களுக்கு விதிக்கப்பட்ட சாஸ்திரம். இந்த நிலையில் பிரஹஸ்பதியின் புத்திரனாக இருந்தாலும், தன்னை சாஷ்டாங்கமாக பணிந்து சிஷ்யனாக பணிவிடை செய்கிறேன் என்ற கோரிக்கையை, சுக்ராச்சாரியாரால் மறுக்க இயலவில்லை. அன்புடன் அவனை தனது சிஷ்யனாக ஏற்றுக் கொண்டார். நாட்கள் கடந்தன. மிகவும் அடக்கமாகவும், மரியாதையுடனும், பணிவுடனும் குரு சேவை செய்து வந்த அவனை சுக்ராச்சாரியாருக்கு மிகவும் பிடித்துப் போயிற்று. குருவைக் காட்டிலும், அவரது மகளான தேவயானிக்கு அவனிடம் ஒரு லயிப்பு, கவர்ச்சி தோன்றி வளர்ந்தது. ஒரு நிலையில் தனது மனதை முழுவதுமாக அவனிடம் பறி கொடுத்தாள்.

சுக்ராச்சாரியாரின் பணியாட்களில் பல அரக்கர்கள், வந்திருப்பது தேவகுரு பிரகஸ்பதியின் மகன் கசன் என்று அறிந்துக் கொண்டு, அவனிடம் குரு ஏமார்ந்து விடக் கூடாது. வஞ்சகமாக

அமிர்த சஞ்சீவினி என்ற மகா மந்திரத்தை பெற்று விடுவான். பிறகு தேவர்கள் கை ஓங்கிவிடும், நமது குருவின் மகளும் அவனிடம் மனதை பறிகொடுத் திருக்கிறாள். கசன் மந்திர உபதேசம் பெறுவதை எப்படியாவது தடுத்து விட வேண்டும் என்று முடிவு செய்தனர்.

அவனை உயிருடன் விட்டு வைத்தால், தேவ யானியின் மூலம் அவனது கோரிக்கை நிறைவேறி விடும் என்றுணர்ந்து அவனைக் கொன்றுவிட முடிவு செய்தனர். ஒருநாள் குருவின் சேவைக்காக வனத் திற்கு பசுவை ஓட்டிச்சென்று, புல் மேயும் விதமாக பராமரித்துக் கொண்டிருந்தான். அரக்கர் கூட்டம் அவனை திடீரென்று தாக்கி, அவனது உடலை கண்டம் துண்டமாக வெட்டிப் போட்டனர். இறந்த அவனது மேனிப்பகுதிகளை, வனத்தில் இருந்த நாய்களுக்கு உணவாகப் போட, நாய்களும் அதைத் தின்று தீர்த்தன.

அன்று நெடுநேரமாகியும் கசன் திரும்பாதது கண்டு, கவலைக்குள்ளான தேவயானி பணியாட்கள் சிலரை அனுப்பி தேடச் சொன்னாள். அவர்கள் தேடுவதை போல தேடிவிட்டு திரும்பி வந்து அவன் எங்கு தேடியும் கண்ணில் படவில்லை, எங்கு சென்றான் என்பதும் தெரியவில்லை என்று கூறினர். மனம் புழுங்கிய தேவயானி தந்தையிடம் சென்று, பசுக்களை மேய்க்கச் சென்ற அன்புக்குரிய கசன் திரும்பி வரவில்லை. தேடச் சென்ற பணியாளர்களின் கண்களிலும் படவில்லை. ஆனால் அவன் ஓட்டிச் சென்ற பசுக்கள் தாமாகவே திரும்பி விட்டன. அவனுக்கு ஏதோ ஆபத்து நேர்ந்துள்ளது என நினைக்கிறேன். எப்படியாவது கசனைத் தேடித் தரவேண்டும் என்று தனது தந்தையிடம் முறை இட்டாள். ஆசார்யார் தனது தவ வலிமையால், நடந்த அனைத்தையும் மனக்கண்ணில் கண்டறிந்தார். தனது புத்ரிமீது அளவற்ற பாசம் கொண்டிருந்த அவர் அமிர்த சஞ்சீவினி மந்திரத்தை பிரயோகம் செய்து, இறந்து போன கசனை மீண்டும் உயிர்பெற்று வரும்படி அழைத்தார். சிறிது நேரத்தில் அவனை உண்டிருந்த நாய்கள் அருகில் வந்தன. அவைகளின் வயிற்றைக் கிழித்துக் கொண்டு கசன் முன்போல அழகுமிகுந்த உடலுடன் அவள் முன்னே தோன்றி னான். பதறிப்போன தேவயானி நடந்த விவரங் களைக் கேட்டாள். கசன் தான் மரணமடையும் வரை இருந்த நினைவுகளை கூறினான்.

பசுக்கூட்டங்களை மேய்த்துக் கொண்டிருந் தேன். சிறிது இளைப்பாற ஒரு ஆலமரத்தடியில் அமர்ந்தேன். அதுசமயம் சில அரக்கர்கள் என்னை சூழ்ந்துக் கொண்டு, நீ யார் எனக் கேட்க, தேவகுரு பிரகஸ்பதியின் மகன் என்றேன். அடுத்த க்ஷணம் தங்களுடைய கத்திகளால் என்னை வெட்டிப் போட்டனர். துடிதுடித்துக் கொண்டிருந்தேன். அது வரை மட்டுமே அறிவேன். அதன் பிறகு எதுவும் நினைவில்லை. தற்போது, குரு அழைக்கும் குரல் கேட்டு நாய்களின் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வந்த நிலை மட்டும் புரிகிறது என்றான் பரிதாபமாக.

தொடர்ந்து பல நாட்கள் தேவயானியின் பணி யாட்களால் பத்திரமாக பாதுகாக்கப்பட்டான். அமிர்த சஞ்சீவினி மூலம், கசன் மீண்டும் உயிரோடு வந்ததை பொறுக்காத அரக்கர்கள் சரியான நேரத்திற்கு காத்திருந்தனர். ஒருநாள் தேவயானியின் பொருட்டு மலர்களை சேகரித்து வர வனத்திற்குச் சென்றான். திடீரென அவனை சூழ்ந்த அரக்கர்கள் அவனை கொன்று, அவனுடைய உடலினை அரைத்து கூழாக்கி சமுத்திரத்தில் கரைத்தனர். கசனைக் காணாமல் பெரும் அதிர்ச்சிக்குள்ளான தேவயானி துடித்தாள், துவண்டாள்.

தனது தந்தையிடம் சென்று மீண்டும் கண்ணீ ருடன் முறையிட்டாள். மகளின் துயரத்தைக் காண சகியாத ஆசார்யார் தனது தவ வலிமையால் அரக்கர்கள் செய்த கொடுமையை மனக்கண்ணால் கண்டறிந்து, இரண்டாவது முறையாக அமிர்த சஞ்சீவினி மந்திரத்தை பிரயோகம் செய்தார். அடுத்த கணம் அந்த அற்புதம் நிகழ்ந்தது, கடல் அலைகள் எழும்பின. கரையை நோக்கி வேகமாக நகர்ந்தன. கடல் நீரிலிருந்த மனித கொழுப்புத் துகள்கள் பிரிந்து, சிறிது சிறிதாக ஒன்றிணைந்தன. சிறிது நேரத்தில் கசன் முழு உருவத்துடன் தோன்றினான். தேவயானி மட்டற்ற மகிழ்ச்சிக் கொண்டாள். மகளின் மகிழ்வு கண்டு அகமகிழ்ந்தார் ஆசார்யார்.

அரக்கர்கள் விடுவார்களா? மீண்டும் உயிர் பெற்று வராத வண்ணம் கசனை தீர்த்துக் கட்ட முடிவு செய்தார்கள். ஒரு கொடுமையான திட்டத்தினை தீட்டினார்கள். ...... மூன்றாவது முறையாக கசன் எவ்வாறு கொலை செய்யப்படுகிறான்? உயிருடன் மீட்கப்படுவானா?

தொடர்ந்து அலசுவோம் அடுத்த இதழில்...




# புத்தக மதிப்புரை



**புத்தகத்தின் பெயர் : ஸம்ப்ரதாய அகராதி**

**கிடைக்குமிடம் : டாக்டர் எம். வரதராஜன்,**
**எண்:5/3, முதல் மாடி, நாட்டு வீராட்சி வீதி,**
**மைலாப்பூர், சென்னை - 600 004.**

**கைபேசி : 98418 84972**

**பக்கங்கள் : 392, விலை : ரூ.500/-**

**ஆசிரியர் : டாக்டர் ஸ்ரீமான் உ.வே.மாடபூசி வரதராஜன், அனந்த் பதிப்பகம்.**

அகராதி என்பது ஒரு மொழியிலுள்ள சொற்களையோ பதங்களையோ அகர வரிசைப் படுத்தி அவற்றிற்குத் தகுந்த பொருளைத் தருவது ஆகும். ஒரு மொழி வளர்வதற்கு அகராதி மிகவும் இன்றியமையாதது.

இதனால் அம்மொழி சிறப்புடையதாகவும் அமைகிறது. பழையன கழிதலும் புதியன புகுதலும் என்னும் கணக்கில் பழையவை மறைந்து விடுகின்றது. 1-7-1912 ல் தெலுங்கு எழுத்தில் அச்சு எழுத்துக்கள் மட்டும் அ முதல் ஔ வரை ஸ்ரீவைஷ்ணவ முத்ராயக ஸபா பண்டிதர்களான ஸ்ரீ உ.வே. புதுப்பேர் வித்வான் இளையவல்லி வேங்கடாசாரியராலும், ஸ்ரீஉ.வே. புதுப்பட்டு திருவேங்கடாசாரியராலும் அநேக ஸம்ப்ரதாய க்ரந்தங்களுக்கு இணங்கி, பரிசோதிக்கப்பட்டு வெளி யிடப்பட்டது.

இந்நூல் ஆசிரியரின் நான்காவது படைப்பு ஆகும் (ப.20-வது வரி). புராண இதிஹாஸங்க ளிலுள்ள சொற்களின், பதங்களின் துணை கொண்டு, இந்நூலை வடிவமைத்துள்ளது போற்றக்கூடியதாகும். அரும்பாடுபட்டு இதை உருவாக்கியது ஆசிரியருடைய பன்மொழிப் புலமையைப் புலப்படுத்துகிறது.

வாய்சொல்லுக்குரிய இலக்கணக் குறிப்பு களைச் சரியான விளக்கத்தோடு அளித்துள்ள பெருந்தகை பேராசிரியர் ப்ரஹ்மஸ்ரீ ருக்வேத கணபாடி ச்யாம ஸுந்தர ஸ்வாமிகள் வ்யாகரண சிரோமணி அவர்களின் கைவண்ணம் இந் நூலுக்கு மெருகூட்டியுள்ளது மிகவும் அருமை. ஸ்ரீமான் உ.வே. ஸ்ரீராம சர்மா ஸ்வாமியின் அணிந்துரை மிகவும் நேர்த்தியாக அமைந்துள்ளது. ஸ்ரீமான் சர்மா ஸ்வாமியின் ஸம்ப்ரதாய அகராதி ஆராய்ச்சியும் இந்நூலுக்கு அழகூட்டுகிறது.

**அந்த அகராதியில் ஆளப்பட்ட சில சொற்கள் :**

- அநிருத்தன்-ஸர்வேச்வரனுடைய ஒரு வ்யூஹ அவதாரம். (பாகவதம் 10-40 அத்யாயம்) (பக். 45-46)
- அவிர்கை - பிரகாசிக்கை (அவிர்சடைமேல் பாய்ந்த முதல் திருவந்தாதி 97) (ப.131).
- அறாக்கயம் - நீர் வற்றாத குளாம் (ப.152).
- ஆர்.ஹதன் - இச்சொல்லுக்கு விரிவான பொருளை அளித்துள்ளது (பக்.210-213).
- உருப்பிணி - ஸ்ரீருக்மிணிப்பிராட்டி பாகவத் கதையை விரிவாகக் கொடுக்கப்படுள்ளது.
- ஓரிக்கை - காஞ்சி நகரத்து அருகில் ஒரு கிராமம். இதில் திருமழிசை ஆழ்வாரின் வாழ்க்கையில் நடந்த சம்பவம் (ப.387).

இவ்வாறாக 7000 சொற்களுக்கும் மேலாகப் பொருள் சுரந்த தக்கச் சான்றுகளுடன் இந்நூல் நிகழ்கிறது. ஆராய்ச்சி செய்பவர்களுக்கு நன்கு பயன் படக்கூடியது என்பது திண்ணம்.

*- கோ.க.அ. ரங்கராஜன்*

**பண்பாட்டு ஆடை**

- ⇨ திருமலையானின் வி.ஐ.பி. தரிசனத்திற்கும் மற்றும் ஆர்ஜித சேவைக்கு வரும் பக்தர்கள் பாரத பண்பாட்டு ஆடைகளையே அணிந்து வர வேண்டும்.
- ⇨ ஆண்கள் : வேட்டி, மேற்துண்டு அல்லது குர்தா பைஜாமா.
- ⇨ பெண்கள் : புடவை, இரவிக்கை/பாவாடை, தாவணி/ பஞ்சாபி டிரஸ்-சுடிதார்.



# கண் கண்ட தெய்வம் - ஸ்ரீசூரிய பகவான்

- நெய்வாசல் நெடுஞ்செழியன், சிதம்பரம். 94422 05862.

சூரியனுக்காக கட்டப்பட்ட கோயில்களில் ஒடிஸா மாநிலம் கோனார்க் கோயில் பிரதானமானது. கலிங்கமன்னன் நரசிங்கதேவன் தொடர் ஆண்டிற்கு முன் 1250ல் இதைக் கட்டினான். உலகில் எங்கும் காணமுடியாத நுணுக்கமான சிற்ப வேலைப்பாடு மிக்க இவ்வாலயத்தின் ஒருபகுதி மட்டுமே தற்போது எஞ்சியுள்ளது. ஆனால் யாவற்றுக்கும் முன்னே தமிழ்நாட்டில் சோழர்கால ராஜபாட்டை என வர்ணிக்கப்படும் கும்பகோணம்–கதிராமங்கலம்–மயிலாடுதுறை சாலையில் திருமங்கலக்குடி அருகில் அமைந்துள்ளது. கோயிலின் பெயராலேயே இவ்வூர் சூரியநாராயணர்கோயில் என்றழைக்கப்படுகிறது.

**தலச்சிறப்பு:**

தென்னகத்திலேயே சூரியனுக்கென்று தனிக் கோயிலைக் கொண்ட தலம், ஒரே கோயிலுக்குள் நவக்கிரகங்களுக்கென தனித்தனி சன்னதிகள் அமையப்பெற்ற தலம், சூரியபகவானை அவரது சன்னதியில் நின்று தரிசிக்கும்போது குருபகவானின் அருட்பார்வையும் ஒருசேர கிடைக்கும் தலம், ஒன்பது கிரகங்களுக்குரிய தோஷப்பரிகாரங்களை ஒரே கோயிலில் செய்வதற்கேற்ப அமைந்த தலம், இரண்டு அசுப கிரகங்களுக்கு நடுவே ஒரு சுபக் கிரகம் என்பதாய் அமைந்த தலம், நவக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்த வினாயகரைக் கொண்ட தலம் என்ற பல சிறப்புக்களை உள்ளடக்கியது.

**தலவரலாறு:**

ஒருநாள் இளந்துறவி ஒருவர் காலவ முனிவரை சந்தித்து, தனது வருங்காலத்தைப் பற்றிக் கூறுமாறு கேட்டார். காலவமுனிவர் தனது ஞானதிருஷ்டியில் இளந்துறவியின் எதிர்காலத்தைப் பற்றி ஆராய்ந்து உமது வருங்காலம் பற்றி கூற ஏதுமில்லை என்றார். இதைக் கேட்ட இளந்துறவி மற்றவர் வருங்காலம் பற்றி கூறும் நீர் உமது வருங்காலத்தைப் பற்றி அறிந்ததுண்டா என்று கேட்டார். இதுகேட்ட காலவ முனிவர் நீவிர் யார் எனக் கேட்க, வந்தவர் யாம் காலதேவன் என்று கூறி மறைந்தார். அது கேட்ட காலவ முனிவர் திடுக்கிட்டு தன் காலத்தைப் பற்றி ஆராய்ந்தார். முன்வினைப்பயனால் தனக்கு தொழு நோய் வரும் என்பதை அறிந்தவர், சக முனிவர்களி டம் விஷயத்தை எடுத்துரைத்தார். அது கேட்ட முனிவர்கள், மனம் வருந்துவதைவிட முன்வினைப் பயனை அளிக்கின்ற நவக்கிரகங்களை சரணடையுங் கள் என்றனர். காலவ முனிவர் விந்திய மலைக்கு வந்து பஞ்சாக்னி வளர்த்து அதனுள் புகுந்து

**இந்தியாவில் சூரிய வழிபாடு**

இந்தியாவில் வேத காலத்திலிருந்தே சூரிய வழிபாடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆதிகாலந்தொட்டே சூரியன், அக்னி, வருணன், வாயு, பூமாதேவி ஆகியோரை இந்துக்கள் தெய்வமாக வழிபட்டு வந்துள்ளனர். வட இந்தியர்கள் சூரியன் மகர ராசியில் பிரவேசிக்கும் நாளை மகர சங்கராந்தியாகவும், தமிழர்கள் பொங்கல் திருவிழாவாகவும் கொண்டாடுகின்றனர்.

தமிழ்நாட்டில் பொங்கல் வைத்து சூரியனை வழிபடும் நாளில் கேரளாவில் பகவதி அம்மன் கோயிலில் பொங்கல் வைப்பதும், ஆந்திரா மற்றும் தெலுங்கானாவில் மகர சங்கராந்தியாகவும், கர்நாடகா மற்றும் மகாராஷ்டிராவில் சூரியனுக்கு பொங்கல் வைப்பதும் நடைமுறையிலுள்ளது. வடகிழக்கு மாநிலங்களான அஸ்ஸாம், மணிப்பூர் மாநிலங்களில் போகாலிபிஹு என்ற பெயரில் அறுவடைத் திருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது. உத்திரபிரதேச மாநிலத்திலும் இவ்விழா கொண்டாடப் படுவதுடன் இந்த நாளில் கரும்பும், தாம்பூலமும் கொடுத்து ஆசிர்வதிக்கும் வழக்கமும் உள்ளது.

நவக்கிரகங்களை வேண்டி கடுந்தவம் புரிந்தார். அக்னி சுவாலைகள் நவக்கிரக மண்டலத்தில் நிரம்பி சுட்டெரிக்க, நவக்கிரகங்கள் அவர் முன் தோன்றி, யாது வேண்டும் எனக்கேட்டன. காலவ முனிவர் தன்னை பீடிக்கவிருக்கும் தொழுநோய் தம்மை அணுகாதபடி வரம்தர வேண்டும் எனக் கேட்டார். அவரின் தவத்தால் மகிழ்ந்திருந்த நவக்கிரகங்கள் அப்படியே ஆகட்டும் என்று வரமருளின.

இச்செய்தியறிந்த பிரம்மன், அனைத்து ஜீவ ராசிகளுக்கும் அவரவர் செய்த வினைகளின் பயன்களை அளிப்பதற்காகவே உங்களைப் படைத்தோம். தனித்து இயங்க சுதந்திரமில்லாத நீங்கள் காலவ முனிவருக்கு வரமருளியது தவறு, எனவே நீங்கள் பூலோகத்தில் பிறந்து காலவமுனிவர் தொழுநோயால் துன்பப்பட வேண்டிய கால அளவு நீங்களும் தொழுநோயால் துன்பப்படுவீர்களாக என சாபமளித்தார். இதனால் மிகவும் வருந்திய நவக்கிரகங்கள் பிரம்மனை பணிந்து மன்னிப்புக் கேட்டதுடன், சாபவிமோசனத்திற்கு வழிகேட்டன.

அதற்கு பிரம்மதேவன், காவிரி ஆற்றின் வடகரையிலுள்ள அர்க்க(எருக்கு)வனமான திருமங்கலக்குடி க்ஷேத்திரம் சென்று கார்த்திகை முதல் ஞாயிற்றுக்கிழமை தொடங்கி பன்னிரண்டு ஞாயிற்றுக்கிழமை முடிய 78 நாட்கள் தவமியற்ற வேண்டும். ஒவ்வொரு திங்கட்கிழமையும் உதயத்திற்கு முன் எழுந்து, காவிரியில் நீராடி, திருமங்கலக்குடி பிராணநாதரையும் மங்கள நாயகியையும் வழிபடவேண்டும். உதயாதி ஏழு நாழிகைக்குள் ஒரு எருக்க இலையை எடுத்து அதில் கைப்பிடி அளவு தயிர் அன்னம் வைத்து அதை உண்டு வரவேண்டும். மற்ற நாட்களில் விரதம் இருக்க வேண்டும் என்றார்.

அதைக் கேட்டு இவ்விடத்திற்கு வந்த நவக்கிரகங்கள் வழியில் சந்தித்த அகத்தியரிடம் எருக்கம் இலையில் தயிர் அன்னம் புசிக்கச் சொன்னதின் காரணத்தைக் கேட்டன. எருக்கம் இலையில் தயிர் சாதத்தை வைத்தால் எருக்கம் இலையின் சாரத்தில் அணுப்பிரமான அளவு தொழுநோய்க்கு மருந்தாகி அந்நோயை குணப்படுத்தும். எருக்கம் சாரத்திலுள்ள ஒரு அணுப்பிரம்மானத்தை தனியே எடுக்க இதுவே வழி என்றார். இதைக் கேட்ட நவக்கிரகங்கள் அர்க்கவனம் வந்து ஒரு வினாயகரை பிரதிஷ்டை செய்து தவமியற்றி பிராணநாதரையும் மங்களநாயகியையும் வழிபட்டன. நோயின் கடுமை பாதியாக குறைந்த பின்னர் சிவசக்தி தம்பதியினர் அவர்களுக்கு காட்சியளித்து உங்கள் தவத்தால் மகிழ்ந்தோம், இன்றுடன் உங்களைப்பற்றிய தொழுநோய் முழுவதுமாக குணமாகும். இந்த அர்க்கவனத்தின் வடகிழக்குப் பகுதியில் நீங்கள் தங்கி தவம் செய்த இடத்தில் உங்களுக்கு தனி ஆலயம் உண்டாகி அது உங்களுக்குரிய தலமாக விளங்கும். அங்கே வந்து வழிபடுவோருக்கு நீங்கள் சுதந்திரமாக அனுக்கிரகம் செய்ய வரம் தந்தோம் என்றார்.

தொழுநோய் நீங்கிய மகிழ்ச்சியில் திளைத்த நவக்கிரகங்கள் அங்கு வந்த காலவ முனிவரைப் பார்த்து தங்களுக்கு ஆலயம் எழுப்புமாறு கேட்டுக் கொண்டன. அதன்படி முனிவரும் நவக்கிரகங்களுக்கும் வினாயகரை பிரதிஷ்டை செய்திருந்த இடத்தில் ஆலயம் கட்டுவித்தார். நவக்கிரகங்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட வினாயகர் இன்றும் இவ்வாலயத்தின் தென்மேற்கு மூலையில் கோள் வினை தீர்த்த வினாயகர் என்ற பெயரில் அருள் பாலிக்கிறார்.

### கட்டுமானம் மற்றும் காலம்:

சோழ மன்னர்கள் காலத்தில் முதலாம் குலோத்துங்க சோழனால் தொடர் ஆண்டு 1113ல் கருங்கல் கற்றளியாக மாற்றப்பட்டு, குலோத்துங்க சோழ மார்த்தாண்டாலயம் என்ற பெயர் சூட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஸ்தபன மண்டபம், நர்த்தன மண்டபம் ஆகியவை விஜயநகர மன்னர்களால் கட்டப்பட்டன. ஆலயத்தில் இடம் பெற்றுள்ள கல்வெட்டுகளில் இவ்வாலயத்தை கற்றளியாக்கிய

முதலாம் குலோத்துங்கன் இரு கிராமங்களை தேவ தானமாக அளித்த விவரத்தை குறிப்பிடுகின்றது.

### தல அமைப்பு:

மேற்கு நோக்கிய ஆலயம், ராஜகோபுரம் 50 அடி உயரத்துடனும், மூன்று நிலைகளுடனும், ஐந்து கலசங்களுடனும் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. ஒரேயொரு பிரகாரத்துடன் கட்டப்பட்டுள்ள ஆலயத்தில் சூரியபகவானின் கருவறை மற்றும் அதற்கு முன்னுள்ள மண்டபங்கள் தரைமட்டத்திலிருந்து உயரத்துடன் அழகான அமைப்புடன் கட்டப்பட்டுள்ளது. ஏனைய பிற எட்டு கிரகங்களுக்குமான சன்னதிகளும், சண்டிகேசுவரரின் சன்னதியும் கீழுள்ள பிரகாரத்தில் கட்டப்பட்டுள்ளது. ஸ்தபன மண்டபத்தில் வடக்குப் புறமாக விசாலாட்சி உடனுறை விசுவ





**மார்ச் மாத பண்டிகைகளும் பருவ தினங்களும்**

**01.03.2022** மஹாசிவராத்ரி

**11.03.2022** திருக்கச்சி நம்பிகள் சாத்து முறை

**13.03.2022** குலசேகராழ்வார் திருநட்சத்திரம்

**18.03.2022** ஸ்ரீலக்ஷ்மி ஜெயந்தி, தும்புரு தீர்த்த முக்கோட்டி

**29.03.2022** அன்னமய்யா நினைவு தினம்

**தி.தி.தே. ஆலய உற்சவங்கள்**

**22.02.2022 முதல் 03.03.2022 வரை**

திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

**10.03.2022 முதல் 18.03.2022 வரை**

தரிகொண்ட ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

**13.03.2022 முதல் 17.03.2022 வரை**

திருமலையப்ப ஸ்வாமி தெப்போத்ஸவம்

**24.03.2022 முதல் 28.03.2022 வரை**

நாகுலாபுரம் ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி சூரிய பூஜை, தெப்போத்ஸவம்

**30.03.2022 முதல் 07.04.2022 வரை**

திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

நாதரும், அவரைத் தொடர்ந்து மகா மண்டலத்தில் சூரியனைப் பார்த்தவாறு குருபகவானும் அருள் பாலிக்கின்றனர். குரு இடம்பெற்றுள்ளதால் இது குரு மண்டபம் என்றும் அழைக்கப்படுகிறது.

கருவறையின் உள்ளே சஞ்சிகை எனப்படும் உஷாதேவி, சாயாதேவியுடன் சிவசூரிய பெருமான் நின்ற கோலத்தில் அருள்பாலிக்கிறார். இவரது கர்ப்ப கிரகத்தின் மீது ஏனதள விமானம் இடம் பெற்றுள்ளது. விமானத்தைச் சுற்றி பன்னிரு சூரியர்கள் அமர்ந்த நிலையில் உள்ளனர். ஒற்றைச் சக்கரத்துடன் கூடிய தேரில் ஏழு குதிரைகள் பூட்டப் பட்ட காலில்லாத அருணன் என்பவனால் ஓட்டப் படும் தேரில் பவனிவரும் சூரியனுக்கான ஆலயம் தேர் வடிவில் அமைக்கப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமாக உள்ளது. கருவறைக்கு வெளியே தென்மேற்கில் சனீஸ்வரனும், தெற்கில் புதனும், தென்கிழக்கில் அங்காரகனும், கிழக்கில் சந்திரனும், வடகிழக்கில் கேதுவும், வடக்கில் சுக்கிரனும், வடமேற்கில் ராகுவும் தனித்தனி கோயில்களில் எழுந்தருளியுள்ளனர். வடக்குப் பிரகாரத்தில் தீர்த்த கிணறும், தெற்கு பிரகாரத்தில் தலவிருட்சமான வெள்ளெருக்கும் இடம் பெற்றுள்ளன. ஆலயத்திற்கு வெளியே வடகிழக்கில் தலதீர்த்தமான சூரியபுஷ்கரணி அமைந்துள்ளது.

உற்சவங்கள் மற்றும் விழாக்கள்: தினசரி நான்கு கால பூஜைகள் நடைபெறும் இவ்வாலயத்தில் சூரியன் சிவனின் அம்சமாக அருள்பாலிப்பதால் சிவாலயங்களில் நடைபெறும் அனைத்து உற்சவங்களும் நடைபெறுகிறது. இதுதவிர வருடாந்திர விழாவும், இரதசப்தமியும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

### அமைவிடம்:

தமிழ்நாடு, மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை–கும்பகோணம் மாற்றுச் சாலையில் திருமங்கலக்குடி அருகிலும், மயிலாடுதுறை – கும்பகோணம் பிரதான சாலையில், ஆடுதுறையிலிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவிலும், சென்னை–கும்பகோணம் தேசிய நெடுஞ்சாலையில் திருப்பனந்தாளிலிருந்து பத்து கிலோமீட்டர் தொலைவிலும் ஆலயம் அமைந்துள்ளது. அருகிலுள்ள ரயில் நிலையம் ஆடுதுறை, மயிலாடுதுறை மற்றும் கும்பகோணம்.

# பக்தியின் ரகசியம்



ஒரு ஏழை குடியானவன். குடும்ப கஷ்டங்களால் அவதிப்பட்டு வந்தான். தன்னுடைய பணிக்காக அதிகாலையில் செல்லும் அந்த ஏழை, இரவு வேளையில் தான் வீடு திரும்புவான். எனவே அவனால் தினமும் ஆலயத்திற்குச் சென்று இறைவனை வழிபட இயல வில்லை.

இறைவனை வழிபட்டு தன்னுடைய துன்பங்களைப் போக்கிக் கொள்ளலாம் என்று நினைத்தால், வேலைப் பளு காரணமாக ஆலயத்திற்குச் செல்ல முடியவில்லையே என்று, அந்தக் குடியானவன் வருந்தினான்.

ஒரு நாள் சிறிய கிருஷ்ணர் சிலையை வாங்கி வந்து, தன்னுடைய குறைகளைச் சொல்லி வழிபட்டு வந்தான். அவன் தினமும் பணிக்கு செல்லும் போதும், இரவு தூங்கும் வேளையிலும் கிருஷ்ணரின் சிலையை வணங்கினான். ஊதுபத்தி, சாம்பிராணி போன்ற பொருட்களை வைத்து வழிபட்டான். பல மாதங்கள் ஆகியும் அவனது வறுமை அகலவில்லை.

இதனால் கிருஷ்ணரின் மீது அந்தக் குடியானவனுக்கு கோபம் வந்தது. நான் தினமும் இவரை வழிபட்டுக் கொண்டிருக்கிறேன். என்னுடைய கஷ்டத்தை இவர் கண்டு கொள்வதே இல்லை என்று நினைத்தவன், சந்தைக்குச் சென்று வேறு ஒரு சாமி சிலையை வாங்கி வந்தான். கிருஷ்ணர் இருந்த இடத்தில் இப்போது புதிய தெய்வத்தை வைத்த குடியானவன், கிருஷ்ணர் சிலையை அதற்கு மேல் உள்ள அலமாரியில் வைத்தான்.

பின்னர் புதிய தெய்வத்திற்கு எளிய வழிபாட்டைச் செய்தான். ஊதுபத்தியை ஏற்றி புதிய சிலைக்கு அருகே வைத்தான். அந்த ஊதுபத்தியின் புகை மெல்ல மெல்ல, மேல் நோக்கிச் சென்று, அலமாரியில் இருந்த கிருஷ்ணரின் சிலை மீதும் பட்டது.

உடனே அந்தக் குடியானவன், கிருஷ்ணா! இவ்வளவு நாட்களாக நான் உன்னை வழிபட்டும் எனக்கு எந்த கைமாறும் நீ செய்ய வில்லை. அப்படி இருக்கையில் புதிய தெய்வத்திற்கு ஏற்றி வைத்திருக்கும் ஊதுபத்தி நறுமணத்தை மட்டும் நீ அனுபவிக்கலாம் என்று நினைக்கிறாயா? என்று கேட்டபடி சிறிய பஞ்சை எடுத்து கிருஷ்ணர் சிலையின் மூக்கில் வைத்து அடைத்தான்.

அடுத்த கணமே அந்த குடியானவனின் முன்பாக வந்து காட்சி கொடுத்தான் கண்ணபிரான், மெய்சிலிர்த்தான் குடியானவன். பக்தா! என்னை மண்ணாக பாவிக்காமல், உயிருள்ளவன் என்று எண்ணி பஞ்சை வைத்து அடைத்தாயே, அந்த பக்தியால் மகிழ்ந்தேன். உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்றார் கண்ணன். குடியானவனின் விருப்பப்படியே அவனது வறுமையைப் போக்கி அருளினார். நாம் வழிபடும் இறை உருவங்களை, வெறும் கல்லாகவும், மண்ணாகவும் கருதாமல், நிஜம் என்று நினைத்தாலே இறைவன் ஓடி வந்து உதவி புரிவான். அதுவே பக்தியின் ரகசியம்.

– திரு. ஜி. வேலாயுதம், சேலம்,984237 50345.







# ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி

## சித்திரக் கதை

*கதை மூலம்: திரு. டி. ஸ்ரீநிவாச தீக்ஷிதலு.*
*சித்திரம் : திரு. கே. துளசி பிரசாத்.*

நாராயணவனத்தில் ஆகாச ராஜன் தன் மகள் பத்மாவதிக்கும் திருவேங்கடவனுக்கும் மிகச் சிறப்பாக திருமணம் செய்தான். பின்னர் ஆகாசராஜன் மருமகனிடம்...





அப்படியென்றால்...
இருவரும் சென்று அகத்தியரை வணங்கினர். மகரிஷியும் அவர்களை வாழ்த்தினார்.
ஸ்ரீநிவாசா! புதுமணத் தம்பதிகள் குறைந்தது ஆறு மாத காலத்திற்கு புண்ணிய தலங்களை தரிசித்தல் கூடாது.
தாங்கள் சேஷாசலத்திற்கு செல்லக்கூடாது.
அப்படியே செய்கிறோம்!
தாங்கள் இருவரும் இந்த ஆறு மாத காலம் என் ஆசிரமத்திலேயே இருங்களேன்.
அப்படியே தங்குகிறோம்
தெய்வத்தம்பதிகள் இருவரும் ஆறு மாத காலத்தினை ஆசிரமத்திலேயே கழித்தனர்.
பத்மா! இனி சேஷாசலம் செல்வோம். மலை ஏற முடியாதவர்கள் என்னை இங்கேயே தரிசிக்கட்டும்.
திருமணமாகாதவர்கள் என்னை தரிசித்தால் திருமணம் கைகூடும். இது எனது வரம் பத்மா.
இது பாக்கியமே ஸ்வாமி!
அடுத்த இதழில் இன்னும் ஒரு கதையை பார்த்து படித்து மகிழலாம்.
தெய்வத்தம்பதிகள் மலை ஏறி சேஷாசலம் சென்றனர். அப்பாதையே ஸ்ரீவாரி மெட்டு ஆனது. அவர்கள் வீற்றிருந்த அப்பகுதியே ஸ்ரீநிவாசமங்காபுரமானது. ஸ்வாமியும் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வரரானார்.




முற்றும்.

**பல்சுவை பகுதி**

## சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...

பக்கத்தில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...



### பொருத்துக...

1. உத்தராயணம் - அ. பொலிக பொலிக
2. சங்க தீர்த்தம் - ஆ. ஏழுவாகன சேவை
3. திருவாய்மொழி - இ. பீஷ்மர்
4. பிரகஸ்பதி - ஈ. திருமூழிக்களம்
5. இரதசப்தமி - உ. கசன்

1.இ, 2.ஈ, 3.அ, 4.உ, 5.ஆ.



### சுலோகம் சொல்லலாமே...

"பெரும் திருவுருவம் சயமங்கையுமாகி
என்பேதை நெஞ்சில்
இருந்தருளும் செஞ்சொல் வஞ்சியைப்
போற்றில் எல்லாவுயிர்க்கும்
பொருந்திய ஞானம் தரும் இன்ப வேதப்
பொருளும் தரும்
திருந்திய செல்வம் தரும் அழியாப்
பெருஞ்சீர் தருமே.

- சரஸ்வதி அந்தாதி

### வார்த்தைகளை சரியாக அணிவகுத்து வாக்கியம் அமைக்கவும்...

ஒரு அறிவியலும் என்பது நிகழ்வு ஆன்மீகமும் இணைந்த இரதசப்தமி

இரதசப்தமி என்பது ஆன்மீகமும் அறிவியலும் இணைந்த ஒரு நிகழ்வு



ஏழு வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்

1. நீராடுபவர்
2. ஆணின் நெற்றி பொட்டு
3. கம்மல் நிறம்
4. சிறுவன் பெல்ட் நிறம்
5. சிறுமி பாவாடை கரை
6. மேல்துண்டு கரை
7. பறவை



### விடுகதை பகுதி...

1. அறுக்காத கதிர் விண்ணிலே அது என்ன ?
2. காலையில் வந்த விருந்தாளி மாலையில் காணவில்லை?
3. ஒளி கொடுக்கும் விளக்கு அல்ல. சூடு கொடுக்கும் தீ அல்ல. பளபளக்கும் தங்கம் அல்ல. அது என்ன?

சூரியன்



Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.



# திருப்பதி
# ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி
# பிரம்மோத்ஸவம்

## 2022 பிப்ரவரி 21 முதல் மார்ச் 03 வரை

**21-02-2022 திங்கட்கிழமை**
இரவு : மூஷிக வாகனத்தில்
விநாயக ஸ்வாமி
அங்குரார்ப்பணம்

**22-02-2022 செவ்வாய்க்கிழமை**
பகல் : துவஜாரோஹணம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**23-02-2022 புதன் கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**24-02-2022 வியாழக்கிழமை**
பகல் : பூத வாகனம்
இரவு : சிம்ஹ வாகனம்

**25-02-2022 வெள்ளிக்கிழமை**
பகல் : மகர வாகனம்
இரவு : சேஷ வாகனம்

**26-02-2022 சனிக்கிழமை**
பகல் : அதிகார நந்தி வாகனம்
இரவு : திருச்சி உத்ஸவம்

**27-02-2022 ஞாயிற்றுக்கிழமை**
பகல் : வ்யாக்ர வாகனம்
இரவு : யானை வாகனம்

**28-02-2022 திங்கட்கிழமை**
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : திருச்சி உத்ஸவம்

**01-03-2022 செவ்வாய்க் கிழமை**
பகல் : திருத்தேர்
இரவு : நந்தி வாகனம்
(மஹா சிவராத்திரி)



**02-03-2022 புதன்கிழமை**
பகல் : புருஷ மிருக வாகனம்
இரவு : கல்யாணோத்ஸவம்
(குதிரை வாகனம்)

**03-03-2022 வியாழக் கிழமை**
பகல் : சூரியப்பிரபை
வாகனத்தில்
நடராஜ ஸ்வாமி,
திரிசூல ஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்,
இராவணாசுர வாகனம்



SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by
Tirumala Tirupati Devasthanams Printing on 25-01-2022 & posting at
Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India
under RNI No.APTAM/2021/80590. Postal Regd.No.TRP/157/2021-2023
"LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(5)/2021-2023"
Posting on 20th of Every month.

# ஸ்ரீநிவாச மங்காபுரம்
# ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி
# பிரம்மோத்ஸவம்
# 20-02-2022 முதல் 28-02-2022 வரை

